# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 319 | சனி, டிசம்பர் 28, 2024 | 15 பக்கங்கள்




## அதிரடி அரசியல் மாற்றங்களை ஏற்படுத்திய 2024

அகிலன்

## உலக வல்லரசின் வீழ்ச்சியை உறுதிப்படுத்திய ஆண்டாக கடந்து செல்லும் 2024

வேல்ஸில் இருந்து அருஸ்




© 2024 இலக்கு இணையம்

## கிளிநொச்சியில் ஊடகவியலாளரை கடத்த முயற்சி



கிளிநொச்சி ஏ- 9 வீதியில் வைத்து ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வன் மீது தாக்குதலை மேற்கொண்ட இனந்தெரியாத நபர்கள் அவரை கடத்த முயற்சி செய்துள்ளனர்.

அலுவலகத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கி புறப்பட்டுக்கொண்டிருக்கையில், கறுப்பு வேனில் வந்த இனந்தெரியாதவர்கள் தன்னை தாக்கி வேனுக்குள் ஏற்றி கடத்த முயன்றதாகவும் தான் அங்கிருந்து தப்பியுள்ளதாகவும் தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கடும் தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர் தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர் தமிழ்ச் செல்வன், பொலிஸில் முறைப்பாடளித்துள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சிரியாவில் தொடர் தாக்குதல்கள் - புதிய அரசின் 23 படையினர் பலி



சிரியாவில் கடந்த புதன்கிழமை(25) இடம்பெற்ற தாக்குதலில் சிரியாவின் புதிய இடைக்கால அரச படையை சேர்ந்த 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், மேலும் 10 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

றாட்ரஸ் பகுதியில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றதாகவும், முன்னாள் அதிபர் அல் பஷார் அசாடின் ஆதரவாளர்களே இந்த தாக்குதல் மேற்கொண்டதாக சிரியாவின் இடைக்கால அரசின் உள்த்துறை அமைச்சர் மொஹமட் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

சிலதினங்களுக்கு முன்னரும் சிரிய இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவரை இடைக்கால அரசின் படையினர் கைது செய்ய சென்ற சமயம் இடம்பெற்ற பதுங்கித் தாக்குதலில் 9 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

அந்த பகுதியில் உள்ள அலவைற் மதக்குழுவினர் கடந்த புதன் கிழமை இடைக்கால

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## முப்படையினரின் வசம் இருக்கும் காணிகள் தொடர்பில் அறியத்தர கோரிக்கை!

முப்படையினரின் வசம் தங்களின் காணிகள் இருக்குமாயின் அது குறித்த உரிய தகவல்களை அறியத்தருமாறு வட மாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் தலைவர் இ.முரளிதரன் பொதுமக்களிடம் கோரியுள்ளார்.

இது குறித்து மேலும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

முப்படையினரின் வசம் உள்ள காணிகளை மக்களுக்காக விடுவிப்பதற்கு படைகளின் ஆளணித்துவத்தை குறைக்க வேண்டும்.

மேலும், வடக்கு மக்களுக்கு நாங்கள் தெரிவிப்பதாவது, உங்களுடைய சொந்த காணிக்குள் இராணுவ படைமுகாம் இருக்குமாயின் எமக்கு தகவல் தாருங்கள்.



இது தொடர்பிலான முழுமையான தகவல்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

மேலும், எதிர்வரும் பெப்ரவரி மாதம் காணி அமைச்சரை சந்திப்பதற்கான நடவடிக்கைகளை காணி உரிமைக்கான மக்கள் அமைப்பு மேற்கொண்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது, உரிய தரவுகள் இருக்குமாயின் எமக்கு காணி பிரச்சினைக்கு தீர்வு காணுவது தொடர்பில் கலந்துரையாடுவோம் என்றார்.

## உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் மீதும் இஸ்ரேல் தாக்குதல்



ஏமனின் சன்னா விமான நிலையத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் பொதுச்செயலாளர் ரெட்றோஸ் ஹெப்றியெஸ் நின்ற சமயம் இஸ்ரேலின் வான் படையினர் தாக்குதலை மேற்கொண்டதால் அவர் மயிரிழையில் உயிர்தப்பியதாக ஏமன் தகவல்கள் தெரிவித்துள்ளன.

நாம் விமானத்தில் ஏறுவதற்கு இரு மணிநேரங்களுக்கு முன்னர் விமான நிலையம் தாக்கப்பட்டது. இந்த தாக்குதலில் விமானத்தின் பணியாளர் ஒருவர் காயமடைந்ததுடன் விமான நிலையத்தில் இருந்தவர்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

நாம் நின்ற இடத்தில் இருந்து சில மீற்றர் தொலைவில் இருந்த விமான

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## ஹசீனாவை நாடுகடத்துமாறு இந்தியாவிடம் மீண்டும் கோரிக்கை

பங்களாதேசத்தின் முன்னாள் பிரதமர் சேக் ஹசீனாவை இந்தியாவில் இருந்து நாடுகடத்துமாறு இந்திய அரசிடம் பங்களாதேசத்தின் இடைக்கால அரசு உத்தியோகபூர்வ கோரிக்கையை இந்த வாரம் அனுப்பியுள்ளது.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக ஆட்சியில் இருந்த ஹசீனா அரசு எதிர்க்கட்சிகளை சிறையில் அடைத்து சர்வாதிகார ஆட்சியை மேற்கொண்டு வந்ததாகவும், முன்னாள் படைவீரர்களின் குடும்பத்தினருக்கு அதிக இட ஒதுக்கீடுகளை வழங்கி ஏனைய மக்களை புறக்கணித்ததாகவும் தெரிவித்து



தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## பிரிக்ஸில் இணைய விருப்பம்

### புட்டினிற்கு அனுரகுமார கடிதம்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரிக்ஸ் அமைப்பில் இணைந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் பாக்கிர் அம்சா, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

விளாடிமிர் புட்டினிற்கு இலங்கை ஜனாதிபதி எழுதியுள்ள கடிதத்தில் பிரிக்சில் சேர்வதற்கான விருப்பத்தை வெளியிட்டுள்ளார், இது குறித்து பிரிக்ஸின் ஏனைய நாடுகளிற்கும் நாங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளோம், சாதகமான பதிலிற்காக காத்திருக்கின்றோம் என ரஸ்யாவிற்கான இலங்கை தூதுவர் பகிர் அம்சா தெரிவித்துள்ளார்.

முன்னதாக மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, பெலருஸ், பொலிவியா, கியூபா, உகாண்டா, கசக்ஸ்தான், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட ஒன்பது நாடுகள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட உள்ளதாக ரஷ்யா தெரிவித்திருந்தது.

கடந்த ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெற்ற மாநாட்டில் பிரிக்ஸ் கூட்டமைப்பில் சேர இலங்கை உட்பட 35 நாடுகள் விண்ணப்பித்திருந்தன.

பிரிக்ஸ் அமைப்பில் சேர தமது விருப்பத்தை வெளிப்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## ஆழிப்பேரலையின் 20ஆவது நிறைவாண்டின் நினைவேந்தல்



இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்பட்ட ஆழிப்பேரலையினால் உயிரிழந் தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் உலக நாடுகளில் கடந்த வியாழக்கிழமை (26) நினைவுகூரப்பட்டது.

2004 ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் மேற்கு கரையில் உள்ள ஆசே பகுதியில் ஏற்பட்ட 9.3 றிட்ச் அளவுள்ள பூமி அதிர்வினால் ஏற்பட்ட ஆழிப்பேரலை 14 நாடுகளை கடுமையாக தாக்கியிருந்தது. 227,898 பேர் இந்த சம்பவத்தில் கொல்லப்பட்டிருந்தனர். பெருமளவான உடமைகளும் அழிவைச் சந்தித்திருந்தன.

இந்த சம்பவத்தில் இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## கிளிநொச்சி நகரில் மட்டும் 36 வீதமான காணிகள் இராணுவம் வசம்!



கிளிநொச்சி மாவட்டத்தின் நகரத் திட்டமிடலுக்குரிய காணிகளில் 36 வீதமானமை, போர்முடிவுற்ற14 ஆண்டுகளின் பின்னரும் இராணுவத்தினரால் விடு விக்கப்படாமலுள்ளமை மாவட்டத்தின் அபிவிருத்தி யில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக கடந்த 26ம் திகதி நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறித்த கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு, இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்பு, பூர்த்தி செய்யப்படாத வீட்டுத் திட்டங்களுக்கான விசேட நிதியீட்டங் களை குறித்த பயனாளிகளுக்குப் பெற்றுக் கொடுத்தல், மதுபானசாலைகளின் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்தல், வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையை இராணு வத்தினரிடமிருந்து விடுவித்தல் மற்றும் வெள்ளப் பாதிப்பினால் சேதமடைந்த வீதிக ளின் புனரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் சார்ந்த முன்மொழிவுகள், நாடாளுமன்ற

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## புலிகள் பாதுகாத்த எமது நிலங்களை வனஇலாகா அபகரித்துள்ளது

### ரவிகரன் எம்.பி சுட்டிக்காட்டு

கடந்த 2009இற்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளால் பாதுகாக் கப்பட்ட தமிழ் மக்களின் பெருமளவான விவசாய மற்றும், குடியிருப்பு நிலங்களை தற்போது வனவளத் திணைக்களம் அப கரித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.



இவ்வாறு வனவளத் திணைக் களத் தால் அடாவடித்தனமாக அபகரிக்கப்பட்டு ள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது வலி யுறுத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச ஒருங் கிணைப்புக்குழுக்கூட்டத்தில, வவுனியா வடக்கு பிரதேசசெயலகப் பகுதிகளில் வன வளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள தமிழ்மக்களின் காணி விடுவிப்புத் தொடர்பில் பேசுபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

இலக்கு

## இறைமையை மீளுறுதி செய்து பாதுகாப்பான அமைதி வாழ்வும் வளர்ச்சிகளும் பெற 2025இல் ஒருமைப்பாட்டுடன் உழைப்போம்

கிரகேரியன் ஆண்டு 2025இல் உலகம் காலடி எடுத்து வைக்கும் சனவரி 1 இல் இப்புத்தாண்டு அனைவருக்கும் பொது வாழ்விலும் தனிவாழ்விலும் பாதுகாப்பான அமைதியும் வளர்ச்சிகளும் அமைய 'இலக்கு' ஆசிரிய குழு வாழ்த்துகிறது.

பாதுகாப்பான அமைதியும் வளர்ச்சிகளும் ஒவ்வொருவரும் தமது மக்கள் இறைமையைப் பேணிட உண்மையும் நேர்மையுமாக அர்ப்பணிப்புக்களுடன் உழைப்பதன் மூலமே என்றும் நடைமுறைச்சாத்தியமாகும். இதனால்தான் 24.12.24 அன்று இவ்வாண்டை அனைத்து மக்களும் மகிழ்ச்சியுடன் எதிர் கொள்ளும் யூபிலி ஆண்டாக அறிவிக்க கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தை பிரான்சிஸ் அடிகளார் அனைத்துக் கத்தோலிக்க ஆலயங்களினதும் தாயாகப் போற்றப்படும் பேதுரு பேராலயத்தின் கதவை மூடி வெளியே நின்று தட்டித் திறந்து கடவுளின் துணையுடன் அனைத்து மக்களும் "நம்பிக்கை என்றுமே ஏமாற்றாது" என்ற உண்மையின் அடிப்படையில் உழைத்திட அழைத்துள்ளார். இந்நேரத்தில் அனைத்து உலக மக்களும் மத வேறுபாடின்றி உலக பாதுகாப்புக்கும் அமைதிக்கும் வளர்ச்சிகளுக்கும் உழைத்திட உறுதி பூணுகையில் உலகில் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுள்ள ஈழத்தவர்களாகிய நாமும் "நம்பிக்கை என்றுமே ஏமாற்றாது" என்ற நம்பிக்கையுடன் எமது இறைமையையும் பாதுகாப்பான அமைதி வாழ்வையும் வளர்ச்சிகளையும் மீளுறுதி செய்ய ஒருமைப்பாட்டுடன் உழைக்க "இலக்கு" அழைக்கிறது.

டிரம்பின் வரிவிதிப்பால் உலக பொருளாதார மந்த நிலையும் அவரின் 'பாதுகாப்பை பணம் கொடுத்துப் பெறு' என்னும் அமைதிக்கான முன்நிபந்தனை 3ம் உலகப்போர் அச்சத்தை வேகம் பெற வைப்பதால் உலக அரசியல் போருக்குரிய மனநிலையில் உலக மக்களை நிறுத்தும் நிலையும் ஒருங்கே வளர்ச்சி அடையப் போவதால் 2025 மிகுந்த சவால்களைக் கொண்ட ஆண்டாக அமையும் என்பதே அரசியல் பொருளாதாரச் சிந்தனையாளர்களின் பெருங்கவலையாக உள்ளது. இதனை எதிர்கொண்டு உக்ரேன் இரஸ்ய களமுனையும் இஸ்ரேயல் பலஸ்தீனியக் களமுனையும் இன்னும் சிரியாவில் ஆட்சி மாற்றத்தின் வழி தோன்றக் கூடிய களமுனையையும் லெபனானிலும் கௌட்டியிலும் வேகம் பெறும் களமுனைகளையும் பயன்படுத்தி ஆசியாவின் அமைதியையும் பொருளாதார வளர்ச்சிகளையும் டிரம்ப் சிதைக்காதவாறு அனைத்து ஆசிய ஆபிரிக்க மக்களும் "பிரிக்ஸ்" கட்டமைப்பின் வழி எதிர்வினையாற்ற முயற்சிப்பதையும் ஐரோப்பிய பாதுகாப்பு என்ற பெயரில் நேட்டோவிற்கு அமெரிக்க இராணுவப் பங்காண்மையும் பொருளாதாரக் கூட்டாண்மையும் அளிப்பதற்கு ஐரோப்பிய நாடுகள் குறிப்பிட்ட பணத்தை வழங்க வேண்டும் என்னும் முன்நிபந்தனை மூலம் டிரம்ப் ஏற்படுத்த முயலும் அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சிகளும் கங்கேரி பிரதமர் விக்டர் தலைமையில் அதிருப்தியுற்ற ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட முயற்சிப்பது ஐரோப்பிய ஒன்றியத்தில் பன்முனைவாக்கத்தை ஏற்படுத்தி நிற்பதை எவ்வாறு எதிர்கொள்வது என்பதும் 2025இல் தான் தீர்மானமாகவுள்ளது. பிரித்தானியாவின் ஐரோப்பிய நாடுகளுடனான தனது பொருளாதார உறுதிப்பாட்டுக்கான நட்புறவாடல்கள் சந்தை ஒருங்கமைவையும் வரி ஒருங்கமைவையும் தவிர்த்த நேருக்கு நேரான பாச உறவாக வளர்ச்சி பெற பிரித்தானியா முயல்கையில் பிரித்தானிய அமெரிக்க ஐரோப்பிய நட்புப்பாலமாக டிரம்பால் பயனபடுத்தப்படும் நிலையும் ஒருங்கே கட்டமைகிறது. அத்துடன் ஐரோப்பாவில் மத்திய வலதுசாரி கட்சிகளின் சனநாயக தாராண்மைவாத ஆட்சிகள் முடிவுக்கு வரக்கூடிய அளவுக்கு அதிதீவிர வலதுசாரிகள் நடைபெற்ற தேர்தல்களில் எதிர்பாராத வெற்றிகளைப் பெற்று ஐரோப்பா ஐரோப்பியர்க்கே என இங்கு வாழும் நிற மக்களை தாமாகவே வெளியே வைக்கும் அரசியல் நகர்வுகளும் வன்முறையால் அச்சப்படுத்தி வெளியேற வைக்கும் உத்திகளும் வேகப்படுகையில் டிரம்ப் தனது நாட்டில் மட்டுமல்ல கனடாவிலும் அதிதீவிர வலதுசாரித்தனத்துக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து மனிதாயத்தைக் கூடச் சிதைக்கும் அரசியலை உலகில் வேகப்படுத்துவார் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது. இதன்வழி அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சியால் உள்நாட்டில் எழும் எதிர்ப்பலைகளைத் தான் நீந்திக்கடக்க முயற்சிப்பார் என்பதும் எதிர்பார்ப்பாக உள்ளது

இந்நேரத்தில் நேரடி அரசியலால் இராணுவ நடவடிக்கைகளால் அல்லாது பொருளாதாரத் தலையீடுகளால் கடலாதிக்கத்தால் உலகின் அனைத்து நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் சீனா புதிய உலக அரசியல் ஒழுங்கு முறைமையில் மற்றைய ஆசிய ஆபிரிக்க நாடுகளுடன் இணைந்து பிரிக்ஸ் மூலம் பொருளாதார உறுதிப்பாட்டையும் அரசாங்கங்களுக்கு அரசாங்கங்கள் என்ற நேரடி அரசியல் உடன்படிக்கைகள் இராணுவக் கூட்டமைப்புக்கள் மூலம் உலகின் தலைமைச் செல்நெறி நாடாக வளர்ச்சி அடைவதால் இதனை அணைத்தும் அடித்தும் திசைமாற்றம் செய்ய டிரம்ப் முயற்சிப்பார் என்பதற்கு உதாரணமாக சனவரி 20இல் தனது பதவியேற்பு விழாவுக்கு சீன அரசத்தலைவரை அழைத்துள்ள அதே நேரத்தில் மறுபுறத்தில் சீனாவின் உற்பத்திகளுக்கு எதிரான கடும் வரிகளைத் தானும் தனது ஐரோப்பிய அணிநாடுகளும் விதிக்க வைப்பது டிரம்பின் இரட்டைப்போக்கை தெளிவுபடுத்துகிறது. இந்நேரத்தில் இரஸ்யா செலோவியாவில் உக்ரேனுடன் அமைதிப்பேச்சு நடாத்த முன்வந்துள்ளதும் உக்ரேன் போரின் தாக்கத்தால் தளர்ந்து போயுள்ளமையும் உக்ரேன் இரஸ்ய களத்தில் மாற்றத்தை எறபடுத்தலாம் என்ற சிறு நம்பிக்கை இருப்பது போலவே இஸ்ரேலியர் கமாஸ் போர்முனையிலும் அமைதிக்கான சிறுநம்பிக்கைகள் துளிர் விட்டாலும் ஈரானுடன் அமெரிக்க இஸ்ரேயல் வழியாக நடாத்தும் சீண்டுகைகள் இலகுவில் இந்தக் களங்கள் மூடப்படுவதை அமெரிக்கா அனுமதிக்காது என்பதை உலகுக்குத் தெளிவாக்கி வருகிறது. அவ்வாறே மதத் தேசியத்தால் தம்மைக் கட்டமைத்துள்ள மத்திய கிழக்கு அரபு நாடுகளும் அமெரிக்காவுடனும் மேற்குலக நாடுகளுடனுமான பல்வேறு பொருளாதார அரசியல் தொடர்புகளால் நீதிக்கோ உண்மைக்கோ துணைநிற்கப் போவதில்லை என்பதும் தெளிவாகியுள்ளது. இந்நிலையில் தெற்காசிய தென்கிழக்காசிய நாடுகளில் சீனாவுக்கு அடுத்த மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கொண்ட சனநாயக நாடான இந்தியா உலகின் இந்த அரசியல் பொருளாதாரச் சுழற்சிகள் வழி தன்னை வல்லாண்மையாக தரம் உயர்த்துவதற்கான அத்தனை முயற்சிகளையும் செய்வது எதார்த்தமாகவுள்ளது. இதனை குளோபல் தெற்கு என்ற உலக அரசியலாகவும் அயலகத்துக்கு முதலிடம் என்ற பிராந்திய அரசியலாகவும் இந்தியா வேகப்படுத்த முயல்கிறது. இதில்தான் இலங்கைத் தீவைத் தனது துரும்பாகப் பயன்படுத்தி அரசியல் விளையாட இந்தியா முயற்சிக்கிறது. இந்த அணுகுமுறையில் தான் வெளிப்படையாக இந்தியாவின் இலங்கையைப் பயன்படுத்தும் திட்டங்களுக்கு தடைகளை ஏற்படுத்திச் சீனாவின் துணையுடனும் அமெரிக்காவின் இணைப்புடனும் இலங்கைத் தீவின் அரசியலை நடாத்த முயலும் அநுரகுமர திசநாயக்காவின் சிறிலங்கா அரசு இந்தியா சீனா அமெரிக்கா என்ற முக்கோணத்துள் ஐரோப்பிய நாடுகள் ஆபிரிக்க அவுஸ்திரேலியக் கண்ட நாடுகள் என்ற விரிந்த பரப்பில் இந்துமாக்கடல் இருப்பு என்ற பலத்தைப் பயன்படுத்தி தன்னை வெற்றிகரமாக நிலைநிறுத்தி வருகிறது

இதனால் நேரடியாகப் பொருளாதார அரசியல் தாக்கங்களை அனுபவித்து ஒடுக்கமடையும் நில கடல் வான் பரப்பாக இறைமை நீக்கம் பெறும் பகுதியாக ஈழத்தமிழர் தாயகம் உள்ளது. ஒடுக்கமுறும் பண்பாடாக ஈழத்தமிழர் தேசியம் மாறியுள்ளது. வடக்கு கிழக்குக்கு இந்தியாவுடன் தனது விஜயத்தின் பொழுது அநுரகுமர திசநாயக்கா செய்த 33 செயற்திட்டங்களுக்கான உடன்படிக்கைளும் வடக்கு கிழக்கின் வளர்ச்சி என்ற போர்வையிலேயே இடம்பெற்றுள்ளது. ஜே ஆர் பாணியிலேயே ஈழத்தமிழரையும் இந்தியர்களையும் மோதவைத்து ஈழத்தமிழர்களின் தன்னாட்சியை இந்தியாவைக் கொண்டு மேலும் தன்னாட்சி நீக்கம் செய்விக்கும் உத்தியாகவும் அமைகிறது.

அவ்வாறே இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்களின் இறைமையினைச் சமத்துவத்துடன் உள்ளத்தளவில் ஏற்க மறுக்கும் சிங்கள பௌத்த பேரினவாதம் ஈழத்தமிழர்களின் பொருளாதார நிலையையும் அரசியல் உறுதிப்பாட்டையும் ஈழத்தமிழர்கள் மேலான இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பால் அவர்களை தமது தாயகத்தில் வாழ இயலாது செய்து வெளியேற்றும் தனது சிறிலங்கா அரசியலை இவ்வாண்டில் சிறிலங்காவின் புதிய அரசுத் தலைவராக கடந்த ஆண்டில் பதவியேற்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமர திசநாயக்காவின் ஆட்சியிலும் வேகப்படுத்தம் என்பதற்கு உதாரணமாக 'தூய்மையான இலங்கை' செயற்திட்ட அரசத்தலைவர் செயலணி 18 க்கும் செயலாளர்கள் அனைவரும் சிங்களவர்களாக நியமிக்கப்பட்டதும் அல்லாமல் அவர்களுக்கு நாடாளுமன்றத்தைப் போலவே சட்டவாக்கம் செய்யும் தகுதியை அளித்துள்ளதும் தனது திணைக்களங்களைக் கொண்டே நாகரிகமான முறையில் தமிழர் தாயக நிலப்பரப்பை அபகரிப்பதும் இன்னும் அனைத்து ஆயுதப் படைகளுக்கும் விடுமுறையை விலத்தி நாட்டை படைபலம் கொண்டு ஆட்சிப்படுத்த முனைவதும் அமைகிறது. இவையெல்லாம் இவ்வாண்டு ஈழத்தமிழர்கள் மிக வலுவான அரசியல் களமாடி உருவாக்கப்படும் புதிய அரசியலமைப்பில் ஈழத்தமிழரின் இருப்பு நீக்கத்தை தடுக்க வேண்டுமென்னும் அழைப்பை விடுத்துள்ளது என்பதே இலக்கின் இப்புத்தாண்டின் முதற் செய்தியாகவும் இதனை ஒருமைப்பாட்டுடனும் தெளிந்த அரசியல் அறிவுடனும் மேற்கொள்ள ஈழத்தமிழர்கள் தவறினால் உலகின் புதிய அரசியல் பூகம்பத்தைப் பயன்படுத்தி அநுர அரசால் தூக்கி எறியப்பட்ட மக்களாவார்கள் என்பதையும் இலக்கு முன்எச்சரிப்பாக இப்புதிய புத்தாண்டில் ஈழத்தமிழர் முன்வைக்க விரும்புகிறது.

**ஆசிரியர்**

# அதிரடி அரசியல் மாற்றங்களை ஏற்படுத்திய




அகிலன்

விடைபெற்றுச் செல்லும் 2024 சர்வதேச அரங்கில் மட்டுமன்றி, இலங்கை அரசியலிலும் அதிரடியான மாற்றங்களை உருவாக்கியிருக்கின்றது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை, தமிழ்த் தேசியக் கட்சிகளின் வீழ்ச்சியை இந்த ஆண்டில் பார்க்க முடிந்தது. தமிழ்த் தலைமைகள் தீர்க்கமான முடிவுகளைத் எடுக்காவிட்டால், இந்த வீழ்ச்சி எதிர் காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற உண்மையும் உணர்த் தப்பட்ட ஒரு ஆண்டாகவே 2024 விடை பெறுகின்றது.



2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற அரசியல் மாற்றங்கள், உலக அரசியலில் புதிய பாதைகளை உருவாக்கியுள்ளது. அமெரிக்காவில் டொனால்ட் டிரம் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியுள்ளமை, இந்தியாவில் நரேந்திர மோடி மூன்றாவது முறை பிரதமரானது, இலங்கையில் தேசிய மக்கள் சக்தியின் பிரமாண்டமான வெற்றி போன்றவை, எதிர்கால அரசியலில் முக்கிய பாதிப்புகளை ஏற்படுத்தும். இவ்வருட தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒரு முட்டுச் சந்தில் கொண்டுவந்து விட்டுள்ளது.

உலகம் முழுவதிலும் நாற்பது நாடுகளில் இவ்வருடம் தேர்தல் நடைபெற்றது. பல இடங்களில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள், உலக அரசியலில் புதிய சமநிலைகளை உருவாக்கும். இந்த ஆண்டின் முக்கிய அரசியல் நிகழ்வுகளைப் புரிந்துகொள்ளு தல், எதிர்கால அரசியல் போக்குகளை அறிய மட்டுமன்றி, அதற்கான திட்டமிடலுக்கும் உதவும். அரசியல் மாற்றங்கள், சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் பாதிக்கும் என்பதால், அவற்றை கவனமாகப் புரிந்துகொள்ளுதல் அவசியம்.

இலங்கையில் இவ்வருடம் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை, 2022 ஆம் ஆண்டில் அரகலயாவில் (Aragalaya) ஆரம்பமான மக்கள் எழுச்சியின் ஒரு தொடர்ச்சியாக பார்க்கலாம். இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் அரசாங்கத்துக்கு எதிரான பெரும் மக்கள் எழுச்சி 2022 இல் ஏற்பட்டது. ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் பதவி விலகலை வலியுறுத்தி மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். விளைவாக, கோட்டபாய பதவி விலகினார், ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதியானார்.



ரணிலின் நிர்வாகம் இலங்கையில் பொரு ளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவரு வதற்காக சில முயற்சிகளை மேற்கொண்டாலும், அவர் மீது மக்கள் மத்தியில் நிலையான அரசியல் நம்பிக்கை இல்லாமை, பொருளாதார சீர்திருத்தங்களில் பொதுமக்கள் எதிர்கொண்ட சுமைகள், பொருளாதாரக் குற்றவாளிகளாகக் காணப்பட்ட ராஜபக்ஷக்கள் மீதான அவரது மென் போக்கு போன்ற காரணங்களால் அவர் 2024 தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டார்.



மக்கள், புதிய மாற்றத்தை நாடி, புதிய அரசியல் தலைமைத்துவத்தை விரும்பினர். பாரம் பரிய அரசியல் தலைமைகள் மக்களால் முற் றாகவே ஒதுக்கப்பட்டனர். 600 க்கும் அதிகமான முன்னாள் அரசியல்வாதிகள் 2024 இல் அரசியலி லிருந்து ஒதுங்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். 2024 அரசியல் மாற்றம் 2022 அரகலயாவில் உருவான மக்கள் எதிர்ப்பின் நீட்சி அல்லது அதன் அரசியல் வெற்றியை பிரதிபலிக்கிறது என்று சொல்லலாம்.

2024 செப்ரெம்பரில் நடைபெற்ற ஜனாதிப தித் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க பெற்றுக் கொண்ட வெற்றியின் மூலம் இலங்கையின் 9 வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றார். இது புதிய அரசியல் மாற்றத்தைக் குறிக்கிறது. அதற்கான ஆரம்பமாகவும் அமை கின்றது. எதிர்கால அரசியல் ஒரு புதிய திசை யில் பயணிக்கப்போகின்றது என்பதை உணர்த்து வதாகவும் அநுரவின் அந்த வெற்றி இருந்தது.



இதன் தொடர்ச்சியாக தேசிய மக்கள் சக்தி (NPP) நாடாளுமன்றத் தேர்தலில் முன்னெப் போதும் இல்லாதவகையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றது. அதாவது, அநுர அலை அந்த பாரிய வெற்றிக்கு காரணமாகியது.

இந்த மாற்றம், இலங்கையின் அரசியல் சூழலில் புதிய போக்கை அறிமுகப்படுத்துகிறது. பொதுமக்கள், பாரம்பரிய அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளில் ஏற்பட்ட விரக்தியால் மாற் றத்தை எதிர்பார்த்து தமது வாக்குகளைப் பயன் படுத்தினார்கள். ஊழல் மோசடிகள் இல்லாத நிர்வாகம் மக்களின் எதிர்பார்ப்புக்களில் முக்கிய மானதாக இருந்தது.



இந்த மாற்றம், இலங்கையின் எதிர்கால அரசியல் பாதையை தீர்மானிக்க முக்கிய பங்களிப்பை வழங்குகிறது. புதிய அரசியல் சக்திகளின் எழுச்சி, சமூக -பொருளாதார பிரச்சி னைகளில் புதிய அணுகுமுறைகளை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

தேசிய மக்கள் சக்தியில் இந்த எழுச்சி பல்வேறு காரணங்களால் முக்கியமானதாகின்றது. உள்நாட்டு அரசியலைப் பொறுத்தவரையில், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தனிக் கட்சி ஒன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருப்பது இதுதான் முதன்முறை.

இரண்டு தடவை மூர்க்கமான முறையில் ஆயுதப் போராட்டங்களை முன்னெடுத்து, பெரும் இழப்புக்களுடன் தோல்வியைத் தழுவி, நீண்டகாலம் தடை செய்யப்பட்ட அமைப்பாகவும் இருந்து, கடுமையான நெருக்கடிகள் போராட்டத் தின் மத்தியில் ஜனநாயக அரசியலில் பிரவேசித்து, மக்களுடைய கணிசமான ஆதரவுடன் அதிகார த்தை ஜே.வி.பி. அல்லது தேசிய மக்கள் சக்தி கைப் பற்றியிருப்பது என்பது நினைத்துப் பார்த்திருக்க முடியாத ஒரு பிரமாண்டமான அரசியல் வெற்றி!



இதன் மூலம் உருவான அநுர அலை பாரம்பரிய தமிழ் தேசியக் கட்சிகளின் ஆதிக் கத்தை குறைத்து, தமிழ் பகுதிகளிலும் தேசிய அளவில் புதிய அரசியல் சக்திகளின் எழுச்சியை வெளிப்படுத்துகிறது. தமிழ் பகுதிகளில், தமிழ் தேசியக் கட்சிகளின் உட்பிளவுகள் மற்றும் தலைமைத்துவப்பிரச்சினைகள், இந்தமாற்றத்துக்கு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்



# தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆரின் சேவைகளை நினைவுகூரும் யாழ்ப்பாணம்..!

## பகுதி 1

17.01.1917 இல் இலங்கையின் கண்டி மாவட்டத்தில் நாவலப் பிட்டியில் பிறந்து 24.12.1987இல் தமிழகத்தில் தனது 70ஆவது வயதில் மறைந்த எம்.ஜி.ஆர் அவர்களின் இயற்பெயர் மருதூர் கோபாலன் இராமச்சந்திரன். இவர் இலங்கையில் கண்டி மாவட்டத்தில் உள்ள நாவலப்பிட்டியில் மலையாள இனத்தில் பிறந்து பின்னர் தந்தை இறந்ததும் தாய் சத்தியதேவியு டன் சென்னைக்குச் சென்றார். ஆரம்பத்தில் மேடை நாடகங்களில் நடித் துக் கொண்டிருந்த எம்.ஜிஆர் அவர்கள் பின்னர் முழுமையான கதாநாயகனாக சதிலீலாவதி என்ற திரைப் படத்தின் மூலம் திரையுலகுக்கு அறிமுகமானார். 1942ஆம் ஆண்டில் தங்கமணியைத் திருமணம் செய்து வாழ்ந்துவந்த நேரத்தில் இவர் சுகயீனம் காரணமாக இறந்தபின்னர் 1962இல் சதானந்தவல்லி என்ற பெண் ணைத் திருமணம் செய்து வாழ்ந்த காலத்தில் அவரும் சுகயீனம் காரணமாக இறக்க அவருக்குப் பின்னர் திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருந்த ஏ.N.ஜானகியைத் திருமணம் செய்தார்.

இருநூறுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து நடிப்புலகின் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த இவர் சமூக சீர்திருத்தக் கதைகளில் முக்கிய பாத்திரமேற்று நடித்ததால், இளைஞர்கள், முதியவர்கள் மற்றும் பெண்களின் மனதில் புரட்சிகரமான சிந்தனைகளை விதைத்தார். இதனால் மக்கள் அவர் பின்னால் அணிதிரண்டனர். இவருக்குப் பல ஆயிரக்கணக்கான சிங்கள இரசிகர்களும் இருந்தனர். ஏழைகளின் பங்காளியாக இருந்து கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்திற் காகப் பெருமளவு நிதியை அள்ளிக் கொடுத்து மக்கள் நெஞ்சில் ஒரு காவியத் தலைவனாக, முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார். இதனால் புரட்சித் தலைவர், மக்கள்திலகம், கொடைவள்ளல் என்ற கௌரவப் பெயர்களினால் இவர் மக்களால் செல்லமாக அழைக்கப்பட்டார்.



இவரது நடிப்புத் திறமையைப் பாராட்டி பாரத ரத்னா என்ற இந்திய அரசின் உயரிய விருதும், எங்க வீட்டுப் பிள்ளையில் சிறப்பாக



நடித்தமைக்கான மிகசசிறந்த நடிகருக்கான விருது 1966இல் கிடைத்தன.அதனை அடுத்து ரிக்சாக்காரன் படத்தில் சிறப்பாக நடித்தமைக்காக



வல்வை.ந.அனந்தராஜ்

1972இல் சிறந்த நடிகருக்கான தேசிய திரைப்பட விருது கிடைத்தது.1995இல் நக்குரதம் படத்தின் கதைக்காக தேசிய திரைப்பட விருது கிடைத்தது. இவற்றைவிடத் தமிழக அரசின் பல்வேறு விருதுகளும் கிடைத்தன. அதேவேளை மிகப் பெரிய கௌரவமாக இந்திய அரச தபால் திணைக்களம் அவரது உருவப் படம் பொறித்த 15 ரூபா பெறுமதியான முத்திரையையும் வெளியிட்டுக் கௌரவித்தது.

ஒரு முறை பத்திரிகையாளர்கள் அவரைப் பேட்டிகண்ட பொழுது, ‘வயதான காலத்திலும் கதாநாயகனாக நடித்தவருகின்றீர்களே’ என்று கேட்டபொழுது, அவர் சிரித்துக்கொண்டே, 20 வயது இளைஞர்கள் 50 வயது முதியவராக நடிக்கும் பொழுது, 50 வயது நடிகர்கள் 20 வயது இளைஞனாக ஏன் நடிக்கக்கூடாது.அதை ஏன் வரவேற்க மறுக்கின்றீர்கள்...? அதுதானே நடிப்பு.....’ என்று பதில் அளித்தார்.

அறிஞர் அண்ணாவின் கொள்கைகளைப் பின்பற்றி அவரையே ஆஸ்தான குருவாக, அரசியல் தலைவராகவும் பின்பற்றிவந்த எம்.ஜி.இராமச்சந்திரன் 1950இல் அண்ணாவின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து பொதுச்செயலாளராகப் பல வருடங்கள் பணிபுரிந்தார். அவரது அர்ப் பணிப்பான சேவையைக் கண்டு மகிழ்ச்சி யடைந்த அறிஞர் அண்ணாத்துரையின் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய தொண்டனாகத் திராவிட முனனேற்றக் கழகத்தின் பல வெற்றிகளுக்காக உழைத்து வந்தார்.

1967இல் ஆ.சு.இரதாவினால் சுடப்பட்டதால் அவரது குரல்வளை பாதிக்கப்பட்டது. இதனால், அவர் தனது வழமையான பேச்சாற்றலை இழந்தார் ஆயினும் தனது பயிற்சியின் காரணமாக படிப்படியாகப் பேசும் திறனைப் பெற்றுத் தொடர்ந்து வழமைபோன்று திரைப் படங்களில் நடிக்கத் தொடங்கினார்.



அறிஞர் அண்ணா இறந்ததும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் கலைஞர் கருணாநிதியின் கை ஓங்கியதால் எம்.ஜி.இராமச்சந்திரன் 1972இல் பல வழிகளிலும் ஓரங்கட்டப்பட்டார். இதனால் மனமுடைந்த எம்.ஜி.ஆர் 1972ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய கட்சியை ஆரம்பித்துக் குறுகிய காலத்தில் மிகப் பெரும் வளர்ச்சியைக் கண்டதால் 1977இல் தமிழகத்தின் ஆட்சியைக் கைப்பற்றியதால் மக்களின் அமோக ஆதரவுடன் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டார்.

தொடரும்...

# 2024இல் தமிழ்த்தேசிய அரசியலின் வீழ்ச்சி

# 2025இல் எழுச்சி வருமா..?

**பா.அரியநேத்திரன்**

இன்னும் இரண்டு தினங்களால் 2025, புதுவருடம் பிறக்கிறது. தைபிறந்தால் வழிபிறக்கும் என்று எம் முன்னோர்கள் கூறுவது உண்டு ஆனால் அது ஈழத்தமிழர்களுக்கு இல்லை. 2024இல் தமிழ்த்தேசிய அரசியல் எவ்வாறு இருந்தது?



தமிழ்த்தேசிய அரசியலில் பிரதான வகிபாகத்தை செலுத்தும் இலங்கைத் தமிழ் அரசியல் கட்சி 2024இல் பல தடைகள், துரோகங்களை சந்தித்த ஆண்டாகவே கடந்தது. 2024, ஜனவரி21இல் கட்சி தலைவருக்கான வாக்கெடுப்பு மூலம் இடம்பெற்றது அதில் 321, தமிழரசுக்கட்சி பொதுச்சபை உறுப்பினர்கள் வாக்களித்து 184, வாக்குகளை பெற்று கட்சி தலைவரான சிவஞானம் சிறிதரன்.137, வாக்குகளை பெற்று நிராகரிக்கப்பட்ட மதியாபரணம் சுமந்திரன் என்பவரின் தலையீட்டால் அந்த கட்சி 17, வது மாநாடும் புதிய நிர்வாக தெரிவும் இடம்பெறாவண்ணம் நீதிமன்றத்தில் தொடர் வழக்குகளால் அந்த கட்சி மாநாடு நடத்தமுடியாத நிலை தொடர்ந்து செல்கிறது போதாக்குறைக்கு தற்போதய தலைவராக தொடரும் மாவை சேனாதிராசாவையும் பிடரியில் பிடித்து தள்ளும் நிலை அவருக்கே ஏற்பட்டுவிட்டது. அவருடைய அதிருப்திகளான நடவடிக்கையால் திட்டமிட்டு பதவியில் இருந்து அவரை விலக்க மத்தியகுழுவில் ஒரு பிரிவினர் முயற்சிக்கின்றனர்.



2024இல், மட்டும் தமிழரசுக்கட்சிக்கு எதிராக கட்சி உறுப்பினர்களே நான்கு வழக்குகள் தொடர்ந்துள்ளனர், 2024, பெப்ரவரி, 15இல் இரண்டு வழக்குகள் திருகோணமலை நீதிமன்றில் பரா சந்திரசேகரமும்,யாழ்ப்பாண நீதிமன்றில் முல்லைத்தீவு பீற்றர் இளஞ்செழியனும் தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குகளும் இதுவரை கடந்த ஆண்டு பெப்ரவரி 29,ஏப்ரல் 05, ஏப்ரல் 23, மே 31, யூலை19, என ஐந்து தவணைகள் இடம்பெற்றும் ஆறாவது தவணைக்காக எதிர்வரும் 2025, பெப்ரவரியில் காத்துக்கிடக்கிறது.

இதைவிட மேலும் இரண்டு வழக்குகள் கடந்த 2024, அக்டோபர்,10,ல் மட்டக்களப்பு முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராசா தாக்கல் செய்து அது கடந்த நவம்பர்,18இல் எடுக்கப்பட்டுஅடுத்ததவணை2025, ஜனவரி,22இல் உள்ளது. மேலும் ஒருவழக்கு யாழ் நீதிமன்றில் 2024,டிசம்பர், 27இல் முல்லைத்தீவு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகனால் தாக்கல் செய்யப்பட்டு எதிர்வரும் 2025, ஜனவரி, 06இல் அந்த வழக்கு இடம்பெற உள்ளது. இவ்வாறு மொத்தமாக நான்கு வழக்குகள் தந்தை செல்வாவால் 1949, டிசம்பர் 18இல் ஆரம்பமாகி 75, வது பவளவிழாவில் தமிழரசுகட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு குழப்பநிலை எதிர்வரும் 2025இல் மீண்டு எழுமா என்பதை பார்ப்போம்.



தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உருவான 2001, தொடக்கம் 2024, வரை அதன் தலைவராக செயல்பட்ட இரா. சம்பந்தன் கடந்த வருடம் 2024, யூன் 30இல் இயற்கை எய்தினார். அவர் இனப்பிரச்சினைக்கு அருடைய காலத்தில் ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்கலாம் என்ற கனவோடு இருந்தே மரணித்தார்.

அவர் கூட உயிரோடு உள்ள போது தமிழரசுக்கட்சிக்கான ஒரு தலைவரை ஒற்றுமையாக தெரிவு செய்திருக்க பல வாய்ப்புக்கள் இருந்தும் அதில் இருந்து அவர் தவறிவிட்டார்.



தமிழ் தேசிய அரசியலில் அடுத்த முக்கிய இடத்தை பெற்றது கடந்த 2024, ஜனாதிபதி தேர்தல் கடந்த எட்டு ஜனாதிபதி தேர்தலிலும் இவ்வாறான ஒரு முடிவு எடுக்காமல் முதல் தடவையாக ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தலில் வடகிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தமிழ்தேசிய கொள்கையையும்,உறுதியான நிலைப்பாட்டையும் வலியுறுத்தி தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டுமென 83.தமிழ் சமூக அமைப்புகள், ஏழு தமிழ்த்தேசிய கட்சிகள், புலம்பெயர் அமைப்புகள், முன்னாள் போராளிகள், பல்கலை மாணவர் சமூகம் என பலதரப்பட்டவர்களின் ஏகோபித்த முடிவு அடிப்படையில் தமிழ்த்தேசியவாதியான மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் 2024,செப்டம்பர்,21,ல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாக சங்கு சின்னத்தில் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

அவரை தோற்கடிக்க வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சியின் மத்தியகுழுவில் சுமந்திரனால் தூண்டப்பட்ட 16,பேர் எதிர்த்து சிங்கள வேட்பாளர் சஜீத் பிரமதாசாவை எந்த ஒரு உத்தரவாதமும் இன்றி ஒரு கருவியாக அவரை பாவித்து தமிழ் பொதுவேட்பாளருக்கு எதிரான பிரசாரத்தை முன்எடுக்க தீர்மானித்து அவரிடம் நன்கொடைகளை பெற்று பிரசாரம் மேற்கொண்டனர்.

இருந்த போதிலும் அவர்களால் தமிழ் தேசிய கொள்கையை தோற்கடிக்க முடியவில்லை, தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரன் மொத்தமாக 226,343 வாக்குகளைப் பெற்று வரலாற்றில் ஒரு தமிழன் அதிகூடிய வாக்குகளை பெற்றார் தமிழ்தேசிய கொள்கை உறுதியை நிருபித்தார்.




அந்த ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திசநாயக்கா வெற்றிபெற்றவுடன் 2024, நவம்பர் 14இல் தேர்தலை நடத்தினார்.

இந்த தேர்தலில் இலங்கை வரலாற்றில் தேசிய மக்கள் சக்தி 159, ஆசனங்களை பெற்று ஆட்சியமைத்தது.

ஆனால் வடகிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களில் தமிழ்தேசிய அரசியலுக்கு அத்திவாரம் இட்ட யாழ்ப்பாணம் மாவட்டம் இம்முறை தேர்தலில் மக்கள் அதே தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து மூன்று ஆசனங்களை பெற்றுக்கொடுத்தனர்.

இது யாழ்ப்பாணமாவட்ட மக்கள் தமிழ் தேசிய கட்சிகள் மீதும், குறிப்பாக இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் மீதும் கொண்ட வெறுப்பை பேரினவாதக்கட்சி மீது வாக்களித்து அவர்களின் கோபத்தை வெளிக்காட்டினர், ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரனை தோற்கடிக்க பிரசாரம் மேற்கொண்ட

1. **எம் ஏ சுமந்திரன்-யாழ்ப்பாணம்.**
2. **கே.சயந்தன்-யாழ்ப்பாணம்.**
3. **இ.அனோல்ட்-யாழ்ப்பாணம்.**
4. **ப.சத்தியலிங்கம்-வவுனியா.**
5. **தி.சரவணபவான்-மட்டக்களப்பு.**
6. **கி.சேயோன்-மட்டக்களப்பு.**
7. **த.கலையரசன்-அம்பாறை.**
8. **அ.நிதான்ஞ்சன்-அம்பாறை,**


ஆகிய எட்டுபேரும் படுதோல்வியடைந்தனர்.

அதில் ஒரேயொரு வேட்பாளர் சாணக்கியன் மட்டும் தெரிவானார்.

ஆனால் தமிழ்பொதுவேட்பாளரை

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# மத்திய கிழக்கு நாட்டுக்கு செல்லும் பெண்களின் அவல நிலை



ஹஸ்பர் ஏ ஹலீம்

இலங்கையில் இருந்து அதிகளவான பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக செல்கின்றனர். இதில் ஆண்களை விட பெண்களே அதிகமாக செல்கின்றனர். நாட்டின் வடக்கு கிழக்கு உட்பட மாகாணங்களில் இருந்தும் தொழில் நிமித்தம் செல்கின்ற போது பெண்கள் ஏமாற்றப்பட்டு பல துன்புறுத்தப்பட்டு வீட்டு பணிப் பெண் என்ற போர்வையில் அடிமைகளாக நடாத்தப்பட்டு ஏமாறுகின்றனர்.

சட்டரீதியில் தொழிலுக்காக செல்வதாயின் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து கொள்வது பாதுகாப்பானதாகும். சில பெண்கள் சட்டரீதியற்ற முறையில் வீட்டுப் பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கின்றனர்.

சட்டத்தின் பிரகாரம் இரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகள் காணப்படுமாயின் குறித்த தாய் பிள்ளைகளை விட்டு விட்டு வெளிநாடு செல்ல முடியாது. சிலர் இதனை மீறி சட்ட ரீதியற்ற வகையில் செல்கின்றனர். இதனால் பிள்ளைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.



இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு தகவலின் படி 2023ம் ஆண்டில் மொத்தமாக 297,656 நபர்கள் பதிவு செய்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. எது எவ்வாறாக இருந்தாலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு பணிப் பெண்களாக சென்றவர்கள் அங்கு துன்புறுத்தப்பட்டு ஏமாற்றப்பட்டு மீண்டும் வெறுங்கையுடன் நாடு திரும்பிய சம்பவங்களும் இருக்கத்தான் செய்கின்றது.

அந்த வகையில் சில சம்பவங்களை நாம் பார்க்கலாம்....

சவூதி அரேபியா மதினாவுக்கு வீட்டு வேலைக்காக 2011.04.06 அன்று சென்றேன். குறித்த வீட்டில் சுமார் ஒன்றரை வருடங்களாக வேலை செய்து வந்த நிலையில் வீட்டு எஜமானி வயோதிப பெண் மணி மரணித்து விட்டார். அதன் பின் எனக்கு சம்பளம் வழங்கப்படாது மீண்டும் ஏஜென்சிக்கு என்னை அழைத்து சென்றார்கள். அங்கிருந்து ஒரு வீட்டுக்கு பணிப் பெண்ணாக அழைத்து சென்ற போதும் வீட்டுக்குள் அடைத்து பெரும் துன்புறுத்தல்களுக்கு மத்தியில் வீட்டு வேலைகளை சம்பளமின்றி செய்தேன். எந்தவித சம்பளமும் வழங்கப்படவில்லை தொடர்ச்சியாக சுமார்13 வருடகாலமாக எனது உறவினர்களுடனோ குடும்பத்துடனோ எந்த வித தொடர்பும் இன்றி இருந்தேன். அதன் பின்னர் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதகரகத்தில் நாட்டுக்கு வருவதற்காக கொண்டு சேர்த்தார்கள்.



கையில் இருந்த கடவுச்சீட்டையும் பறித்து விட்டார்கள். இங்கு அகதிகள் போன்று அடைக்கப்பட்டு சுமார் ஒரு மாதத்தின் பின் உடுத்திய உடையுடன் அங்கிருக்கும் காவல் துறையினர் ஐம்பது றியால் பணம் தந்து அனுப்பினர். இதன் பின்னர் நாட்டை வந்தடைந்தேன் . பெரும் கவலையான விடயம் வெறுங்கையுடன் வந்து எனவு உறவுகளை காணக் கிடைத்தது " என திருகோணமலை மாவட்டம் முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த அப்துல் பரீட் ஹமீதா உம்மா வயது (61) (பெயர் மாற்றப்பட்டுள்ளது) தெரிவித்தார்.




இவ்வாறாக வீட்டு வேலைக்காக பணிப் பெண்களாக செல்லும் பெண்கள் இலங்கையில் உள்ள மோசடி முகவர்களிடம் ஏமாற்றப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அரச அங்கீகாரம் பெற்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணி யகத்தில் பதிவு செய்த முகவர்களிடம் இருந்து தம்மை பதிவு செய்து சட்ட ரீதியாக செல்வதை பணியகம் வலியுறுத்துகிறது. ஆண்கள் வெளிநாடு செல்வதாக இருந்தால் ஒரு தொகை பணம் முகவர் நிலையத்துக்கு வழங்கப்பட வேண்டும், பெண்கள் பணிப்பெண்களாக செல்வதாக இருந் தால் முகவர்கள் ஊடாக ஒரு தொகை பணம் வழங்கப்படுகிறது இது ஏன் இவ்வாறு இடம் பெறுகிறது என பார்த்தால் பாதுகாப்பாக வெளி நாடுகளுக்கு தொழிலுக்கு செல்வதை ஊக்கு விப்பதற்காக இடம் பெறுவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

“முகவர் ஊடாக சொல்லப்பட்ட சம்பளம் வழங்கப்படவில்லை. 140 தினார் தருவதாக சொல்லி 120தினார் தந்தார்கள் என குவைத் நாட்டுக்கு பணிப் பெண்ணாக சென்று நாடு திரும்பிய தம்பலகாமம் மீரா நகர் பகுதியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயான சமீனா பேகம் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) வயது (31) தெரிவித்தார்.



தொடர்ந்தும் தெரிவித்த அவர், சமையல் வேலை என்று தான் நினைத்து சென்றேன். அங்கு பிள்ளை பராமரிப்பிற்காக விட்டார்கள். நான் இருந்த வீட்டுக்காரன் இரு திருமணம் செய்திருந்தார். வெள்ளிக் கிழமைகளில் மற்றொரு திருமணத்தில் உள்ள பிள்ளைகளும் வருவார்கள். ஒட்டு மொத்தமாக சமைத்து வீட்டு வேலை செய்து பிள்ளைகளை பராமரிப்பதும் கஷ்டமாக இருந்தது. இதனால் வீட்டு எஜமானிடம் வேலையை மாற்றுமாறு கோரினேன். முடியாது என்றார்கள். சுமார் மூன்று மாதம் கழித்து வீட்டை விட்டு வெளியேறி காவல்துறையினரின் பாதுகாப்பின் மூலமாக வெறுங் கையுடன் நாட்டை வந்தடைந்தேன்” என்றார்,



இவ்வாறான ஏமாற்றங்களால் மன உளைச் சலுக்கு குறித்த பணிப் பெண்கள் ஆளாகின்றனர்.

அதிகமாக வறுமை காரணமாக பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெண்கள் செல்கின்றனர். குடும்பத்தில் ஆண்களை அனுப்புவதாயின் முகவர்களுக்கு சுமார் 7 இலட்சம் வரையில் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் பெண்களுக்கு முகவர்களால் சிறு தொகை பணம் வழங்கப்படுவதனால் பெண்கள் தமது குடும்பத்தைப் பிரிந்து அதிகளவாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கின்றனர்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தமிழ் தேசியத்தை சிதறடிக்கும் சிறீலங்காவின் புதிய அரசு

2009ஆம்ஆண்டில்தமிழீழவிடுதலைப்புலிகளின் போர் ஆற்றலை முறியடிக்கும் வகையில் இந்தியா உட்பட பத்திற்கும் மேற்பட்ட நாடுகளின் இராணுவத்தினரின் உதவியுடன் 145,000 தமிழ் மக்களைக் கொன்று பல ஆயிரக்கணக்கான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளை அழித்து விடுதலைப் போராட்டத்தை மௌனிக்கச் செய்து, பால்சோறு வழங்கி வெற்றிவிழாக் கொண்டாடிக்கழித்து, தமிழ் மக்களையும்,புலம் பெயர்ந்த தமிழ் உறவுகளையும் வெறுப்படையச் செய்த மகிந்த ராஜபக்ச ஆட்சியில் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கெதிரான வன்முறைகளைக் கட்ட விழத்துவிட்ட பாதையிலேயே கோட்டபாயாவின் அரசாங்கமும் பயணித்தது. இவர்களின் ஆட்சி முறையின்கீழ் தமிழ் மக்கள் தமக்கு என்ன நிகழப்போகின்றது என்பதை எதிர்பார்த்தே வாழ்ந்து வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ரனில் விக்கிரமசிங்கா மிகவும் தந்திரமானமுறையில் தனது ஆட்சிக் காலத்தை நகர்த்திவந்த நிலையிலும் தமிழ்மக்கள் இவரது ஆட்சிக் காலத்திலும் ஆபத்தின் விளிம்பிலேயே தமக்கு என்ன நடக்குமோ என்ற அச்சத்திலேயே வாழ்ந்து வந்தார்கள்.



போர் மௌனிக்கப்பட்டதும் ஐக்கிய நாடுகள் சபையும்,உலக நாடுகளும் ஈழத் தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் வாக்குறுதி அளித்து பதினைந்து வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் எந்தத் தீர்வுமின்றியே ஏமாற்றப்பட்டு வந்தனர். இந்த நிலையிலும் கூட ஐக்கிய நாடுகள் சபையும் மௌனம் காத்து வந்தமையால் மகிந்த ராஜபக்சா, கோட்டபாய ராஜபக்சா, மற்றும் அவர்களைத் தொடர்ந்து, ~இராணி மாலை போட்டதால் ராஜாவாக~ திடீரென ஆட்சிக்கு வந்த ரனில் விக்கரமசிங்காவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையினதும் மௌனமும்,இந்திய அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு எதிராக எடுத்துவரும் நடவடிக்கைகளும் வாய்ப்பாகப் போய்விட்டதால் ரனில் விக்கிரமசிங்காவும் தமிழ் மக்களை ஏமாற்றியே எந்த விதமான அரசியல் தீர்வுகளையும் முன்னெடுக்காமலேயே தனது காலத்தைக் கடத்தி வந்தார்.

இந்த நிலையில் அநுரா திசநாயக்காவின் பின்புலத்தில் இடம்பெற்ற காலிமுகத் திடல் அரகலயப் போராட்டத்தின்மூலம், ராஜபக்சாக்களின் குடும்ப ஆட்சி கவிழ்க்கப்பட்டதால் தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் இயங்கிவரும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்றுமே எதிர்பார்க்கமுடியாத அளவுக்கு சிங்கள மக்கள் மத்தியில் எழுச்சிபெறத் தொடங்கியது.இதனால் இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்படவேண்டும் என்ற உணர்வு தென்னிலங்கையின் சிங்கள மக்கள் மத்தியில் பூதாகரமாக எழுச்சிபெற்றது. இந்த நிலையில் பத்தாவது ஜனாதிபதி தேர்தலில் 50 வீதத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றிபெற்று அநுரகுமார திசநாயக்கா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு சிங்களதேசத்தில் மகாராஜாவாக வர்ணிக்கப்பட்டார்.அந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவு மிகக் குறைவாகவே ஜே.வி.பிக்குக் கிடைத்தது.



**வல்வை.ந.அனந்தராஜ்**

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக எந்தவிதமான வாக்குறுதியும், சஜித் பிரேமதாசாவினால் வழஙங்கப்படாத நிலையிலும், ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை சுமந்திரனின் ஆலோசனையின் பேரில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் முடிவுக்கு எதிராக எடுத்தது,சஜித் பிரேமதாசாவுக்காக வடக்குக் கிழக்கில் பிரசாரம் செய்துவந்தபோதும் சஜித் தோல்வியைத் தழுவினார்.அதேவேளை தமிழ்மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியைக் காட்டும் வகையில் சிவில் சமுக அமைப்புக்களினால் முன்வைக்கப்பட்ட தமிழ் பொதுக்கூட்டமைப்பின் சார்பில் தமிழ் பொது வேட்பாளராக பா.அரியநேந்திரன் சங்கு சின்னத்தில் போட்டியிட்டபோதும் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் ஒற்றுமையின்மை மற்றும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகளிடையே உள்ள பிளவுகள் காரணமாக பொதுக் கூட்டமைப்பு வேட்பாளர் எதிர்பார்த்த வாக்குகளைப் பெறமுடியாது போனதும் ஏமாற்றத்தைத் தந்தது.



இடதுசாரிக் கொள்கையைகொண்ட அநுரகுமாரதிசநாயக்காஜனாதிபதியாகப்பொறுப்பேற்றதும் நாட்டுமக்களைக் கவரும் வகையில் சில அதிரடியான செய்திகளை அறிவித்தார்.அவற்றுள், கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசியல் ஆதாயத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட மதுபான சாலைகளின் அனுமதிப் பத்திரங்கள் ரத்துச் செய்யப்படும். ஆனால் இதுவரை எந்த ஒரு மதுபான சாலைகளினதும் அனுமதிப்பத்திரங்கள் ரத்துச் செய்யப்படவில்லை.

சட்டவிரோதமான முறையில் மதுபான அனுமதியைப் பெற்றுப் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை இலாபமாகப்பெற்ற தமிழ் அரசியல்வாதிகள் உட்பட அனைத்து அரசியல்வாதிகளின் பெயர்களும் நாட்டுமக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படும். இதுவரை எந்த ஒரு அரசியல்வாதியினதும் பெயர்கள் பகிரங்கப்படத்தப்படவில்லை.. இதில் முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேவரனின் பெயர்தான் பந்தாடப்பட்டது.



முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அமைச்சர்களினதும் மோசடிகள், ஊழல்கள் அம்பலப்படுத்தப்படுவதுடன் அவர்களால் கடந்த காலங்களில் களவாடப்பட்ட சொத்துக்கள் மற்றும் வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்ட பணம் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்படும்.

அமைச்சர்கள் பயன்படுத்திவந்த நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் மற்றும் சொகுசு வாகனங்களை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுத்தல். இதில் பரபரப்பாக இருப்பதற்காக பல அமைச்சர்களிடம் இருந்த அதி சொகுசு வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவை காலி முகத்திடலில் பிரச்சாரம் செய்யும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்தல். இதுவரை அது தொடர்பான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.இது மட்டமல்லாது ஏற்கனவே இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஓய்வூதியங்களும் இரத்துச் செய்யப்படவேண்டும். படித்துப் பட்டம் பெற்று 26 வருடங்களுக்கும் மேலாக அரசபணியாற்றிய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல் கல்வித் தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டும் என்ற நிபந்தனையைக் கொண்டிருக்காது வெறும் ஐந்து வருடங்கள் பாராளுமன்றத்தில் இருந்துவிட்டு வந்தால் அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் முறை இந்த நாட்டில் இருக்குமாயின் வாழ் நாள் பூராக ஓடாக உழைத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் ஆணிவேராக விளங்கும் அனைத்துத் தொழிலாளர்களும் அவர்கள் உழைத்துக் களைத்தபின் அவர்களின் வாழ்வுக்காக அரசாங்கம் ஓய்வூதியத்தை அறிமுகப்படுத்தவும் வேண்டுமல்லவா...?

அமைச்சர்களுக்காகச் செலவிடப்பட்டு வரும் பல மில்லியன் ரூபா செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வீடுகள் இல்லாமல் செய்வதுடன் தூரத்தில் இருந்து வருபவர்களுக்கே வீடுகள் வழங்குதல்.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவர். தமிழ் மக்களின் ஆக்கிரமிக்கப்பட்ட குடியிருப்பு மற்றும் விவசாய நிலங்களை விடுவித்து உரியவர்களிடம் கையளித்தல்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# 2024 பாதையும் பயணமும்

## துரைசாமி நடராஜா

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்து விட்டன. எனினும் இவர்களின் வாழ்க்கைப் போக்கில். முன்னேற்றகரமான மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு இடம்பெறவில்லை. இந்நிலையில் மலையக மக்களின் அபிவிருத்தி தொடர்பில் தொடர்ச்சியாகவே பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. எனினும் இதன் செயல்வடிவம் கேள்விக்குறியாகி உள்ளதையே பெரும்பாலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்நிலையில் முடியும் தறுவாயில் உள்ள நடப்பு வருடத்திலும் இம்மக்களின் அபிவிருத்தி தொடர்பில் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளமையை நீங்கள் அறிவீர்கள். புதிதாக ஆட்சிபீடமேறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் காத்திரமான பல வாக்குறுதிகளை இப்போது வழங்கியுள்ளது. இவ்வாக்குறுதிகள் அனைத்தும் கடந்த காலங்களைப் போன்று புஷ்வாணமாகிவிடாமல் எதிர்வரும் ஆண்டில் சாத்தியமாக வேண்டும் என்பதே பலரினதும் எதிர்பார்ப்பாகும்.



2024 ம் ஆண்டு முடிவடைவதற்கு இன்னும் ஒரு சில நாட்களே எஞ்சியுள்ளன. 2024 ம் ஆண்டிற்கு விடை கொடுத்து 2025 ம் ஆண்டை வரவேற்கும் தறுவாயில் நாம் இப்போது இருக்கின்றோம். இந்நிலையில் 2025 ம் ஆண்டு நாட்டு மக்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் கொண்டு வரும் ஆண்டாக அமைய வேண்டும் என்று பலரும் இறைவனை பிரார்த்திக்கின்றனர். இதனிடையே மலையக மக்கள் இந்நாட்டில் பல்வேறு சவால்களையும், துன்ப துயரங்களையும் சந்தித்து வரும் நிலையில் அம்மக்களின் அடிப்படை பிரச்சினைகள் கூட தீர்க்கப்படாதுள்ளதாக விசனம் தொரிவிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் பிறக்கின்றபோது அம்மக்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அவ்வருடத்தில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் புத்தாண்டை எதிர்நோக்குகின்றனர். எனினும் அம்மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றங்களையே சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### தேசிய நீரோட்டத்தில் இணைத்தல்

இந்த வகையில் கடந்த காலங்களில் அம்மக்களின் அபிவிருத்தி தொடர்பில் வழங்கப்பட்ட சில வாக்குறுதிகளை நோக்குவோம். இவ்வாக்குறுதிகள் அரசியல், பொருளாதார, சமூக வாழ்க்கை நிலைமைகள், கல்வி, தொழிலாளர்களின் குடியிருப்பு, காணியுரிமை, தொழில் வாய்ப்பு, மருத்துவம், சுகாதாரம் சார்ந்ததாக அமைந்திருந்தன. இதற்கேற்ப அரசியல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள், வரவு செலவு திட்ட முன்மொழிவுகள் போன்றவற்றில் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்கப் போவதாக வாக்குறுதிகள் பலவும் வழங்கப்பட்டிருந்தமை தெரிந்ததாகும்.



பெருந்தோட்டங்களின் இருப்பு மெது மெதுவாக சிதைவடைந்து வரும் நிலையில் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பாதையிலும் அது சிக்கல்கள் பலவற்றையும் தோற்றுவித்து வருகின்றது. இந்நிலையில் மலையக மக்களுக்கு உறுதிப்பத்திரத்துடன் கூடிய 10 பேர்ச் காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்திருந்த நிலையில் மலையக மக்கள் தமது காணிகளில் தேயிலையைப் பயிரிட்டு அவற்றை தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கக்கூடிய வகையில் பெருந்தோட்டத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதற்கு பெருந்தோட்டக் கம்பனிகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும் என்றும் தெரிவித்திருந்தார்.

மேலும் மலையக மக்கள் அனைவரையும் தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கான தீர்மானம் அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனை முன்னிறுத்தி அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் நியமிக்



கப்பட்டுள்ள குழுவில் ஜீவன் தொண்டமானும் அங்கம் வகிக்கின்றார். அக்குழுவின் ஊடாக இதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் ரணில் தெரிவித்திருந்தார். எனினும் அக்குழுவின் செயற்பாடுகள் எந்தளவுக்கு ஆக்கபூர்வமானதாக அமைந்தன என்பது கேள்விக்குரிய விடயமேயாகும். மலையக மக்கள் மத்தியில் கல்வி மேம்படுத்தப்பட வேண்டும். அதனை முன்னிறுத்தி அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் எவ்வித இன, மத வேறுபாடுகளுமின்றி சமத்துவமான கல்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தாக இருந்தது. இதேவேளை 2024 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை கடந்த நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்த ரணில் விக்கிரமசிங்க, மலையக மக்களுக்கு காணி மற்றும் வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்ள 400 கோடி ரூபாவும் மலையக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 1000 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும் ரணில் விக்ரமசிங்க நீண்ட காலமாக அரசியலில் ஈடுபட்டு அமைச்சராக, பிரதமராக, ஜனாதிபதியாக பதவி வகித்தபோதும் மலையக மக்கள் தொடர்பில் அவர் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை மட்டுமே வழங்கியதாக ஒரு விமர்சனமும் இருந்து வருகின்றது.

### நிர்வாக அமைப்புக்கள்

மலையக மக்களின் அபிவிருத்தி கருதி மைத்திரிபால சிறிசேனவும் தனது ஆட்சிக் காலத்தில் முன்வைப்புகள் பலவற்றையும் வைக்கத் தவறவில்லை. மலையக மக்களை காணியுரிமையுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட நவீனமயமான கிராமிய சூழலில் தனி வீடுகளும், பொது வசதிகளும் அமைத்துக் கொடுப்பதுடன் இத்திட்டம் முழுமையாக தோட்ட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் பிரதேச சபைகளின் மூலம் சேவைகளை பெற்றுக் கொள்ளக்கூடியவாறு உருவாக்



கிக் கொடுக்கப்படும். மலையக மக்களது வாழ்வாதார கட்டமைப்பு, கல்வி, உயர்கல்வி, கலாசார, சுகாதார பொது வசதிகள் சம்பந்தமாக நிர்வாக அமைப்புகள் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டு அரச சேவைகள் அம்மக்களுக்கு நேரடியாக கிடைப்பதற்கு ஆவன செய்யப்படும். கல்விப் பொதுத்தராதர பரீட்சைக்கான விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய விசேட பாடசாலைகளை மலையகத்தில் உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மைத்திரிபால வலியுறுத்தி இருந்தார். எனினும் இவையெல்லாம் 'ஏட்டுச் சுரைக்காயானதே' மிச்சமாக இருந்தது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# உலக வல்லரசின் வீழ்ச்சியை உறுதிப்படுத்திய ஆண்டாக



# கடந்து செல்லும் 2024

வேல்ஸில் இருந்து **அருஸ்**

மனித வரலாற்றில் மிக அதிக நாடுகளில் தேர்தல்கள் இடம்பெற்ற ஆண்டாக இந்த வருடம் கடந்து செல்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கின்ற 70 இற்கு மேற்பட்ட நாடுகளில் தேர்தல்கள் இடம்பெற்றுள்ளன. அதாவது உலக மக்கள் தொகையில் அரை பங்குக்கு மேற்பட்ட மக்கள் தமது வாக்குபலத்தை பயன்படுத்தியுள்ளதுடன், பல நாடுகளில் தேர்தல்கள் இன்றியே ஆட்சி மாற்றங்களும் இடம்பெற்றுள்ளன.



சிரியாவில் அரசு கைப்பற்றப்பட்ட அதே சமயம் ஜேர்மனி அரசும் வீழ்ந்தது. மறுபுறமாக தென்கொரிய அதிபரும் தனது பதவியை இழந்தார், அதற்கு முன்னர் பங்களாதேசத்தின் ஹசீனா அரசு வீழ்த்தப்பட்டது, மேலும் ஈரானின் அதிபர் உலங்குவானூர்தி விபத்தில் கொல்லப்பட்டதால் அங்கும் தேர்தல் மூலம் புதிய அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஜோர்ஜியா மற்றும் வெனிசுலாவில் இடம்பெற்ற தேர்தல்களை அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன், மோல்டோவில் இடம்பெற்ற தேர்தலையும் மீண்டும் நடத்துமாறு கூறி தமக்கு சார்பான அரசை அவர்கள் நிறுவியுள்ளனர்.

மேலும் தேர்தல்கள் இடம்பெற்ற நாடுகளில் மிக முக்கிய நாடுகளான ரஸ்யாவில் பூட்டீன் மீண்டும் பதவிக்கு வந்ததுடன், அமெரிக்காவிலும், பிரித்தானியாவிலும் ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ளது. பிரான்ஸிலும் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையை அரசு இழந்துள்ளது. இந்தியாவில் பிரதமர் நரேந்திர மோடி அரசு தனது பெரும்பான்மை பலத்தை இழந்து பலவீனமான அரசியல் உருவாகியுள்ளது. இலங்கையில் பல தசாப்தங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரண்டு பிரதான காட்சிகளும் அரசியலில் இருந்து தூக்கி எறியப்பட்டுள்ளன.

அதாவது பல அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்த ஆண்டாக இந்த ஆண்டு கடந்து சென்றாலும், போர் விரிவாக்கம் பெற்றுச் செல்லும் ஆண்டாகவும் இந்த ஆண்டு திகழ்ந்துள்ளது. உக்ரைன்-ரஸ்ய போர் மேலும் தீவிரமடைந்ததுடன், தற்போது ரஸ்யாவின் வெற்றி உறுதி என்ற நிலைக்கு களமுனை மாற்றம் பெற்றுள்ளது. எனினும் இந்த ஆண்டு முடிவுறும் போது அந்த போர் தனது மூன்றாவது ஆண்டுக்குள் நுழையப்போகிறது.



ஆனால் அந்த போர் உலகில் ஏற்படுத்திய பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் பல, இதுவரையில் உக்ரைன் போருக்கு அமெரிக்கா தலைமையிலான மேற்குலக கூட்டணி நாடுகள் 340 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளன. ஆனால் உக்ரைன் செலுத்திய விலைகள் மிக அதிகம். போர் ஆரம்பிக்கும் போது 43 மில்லியன் மக்கள் கொகையை கொண்ட அந்த நாட்டில் தற்போது 20 மில்லியன் மக்களே எஞ்சியுள்ளனர்.

ஏனையவர்கள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர், போரில் இதுவரையில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட உக்ரைன் படையினர் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நேட்டோ படையினரின் நவீன ஆயுதங்கள் எவையும் களமுனையில் மாற்றங்களை கொண்டுவரவில்லை.

இந்த களமுனை தோல்விகள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அரசியலை ஆட்டம் காணவைத்துள்ளது. ஒரு நூற்றாண்டு உலக வல்லரசாக திகழ்ந்த அமெரிக்காவின் நிலையும் இந்த ஆண்டுடன் வீழ்ச்சியை காண ஆரம்பித்துள்ளது. கடந்த 15 வருடங்களாக அமெரிக்கா தனது அரசியல் ஆளுமையை உலகில் இழக்க ஆரம்பித்திருந்தாலும் இந்த வருடம் தான்




அது அதிகம் வெளித்தெரிய ஆரம்பித்துள்ளது.

தனது வீழ்ச்சியை தடுப்பதற்காக உலகில் உள்ள பல வலிமையற்ற நாடுகளை தண்டிக்க அமெரிக்கா முனைந்து நிற்பதையும் அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக 100 பில்லியன் டொலர்களை வரிச்சலுகையாக பெறும் கனடாவை தனது மாநிலமாக பிரகடனப்படுத்த அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முற்பட்டுள்ளதும், 300 பில்லியன் டொலர்களை வரிச்சலுகையாக பெறும் மெக்சிக்கோவை ஆக்கிரமிப்பேன் என அவர் மிரட்டியதும் போக, தற்போது டென்மார்க்கின் ஆளுமையில் உள்ள 57,000 மக்கள் தொகையை கொண்ட ஜேர்மனியை விட 6 மடங்கு அதிக பரப்பளவைக் கொண்ட ஆனால் அதில் 80 விகிதம் பனிக்கட்டிகளால் சூழப்பட்ட கிறீன்லாட்டை கைப்பற்றுவேன் எனவும், 1977 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் 1999 ஆம் ஆண்டு அமெரிக்காவிடம் இருந்து பனாமாவுக்கு வழங்கப்பட்ட கால்வாயை மீண்டும் கைப்பற்றுவேன் என ட்ரம்ப் தெரிவித்ததும் அமெரிக்காவின் இயலாமையை காண்பிக்கின்றது.



ஏனெனில் டிறம்பினால் கூறப்பட்ட இந்த நாடுகள் அனைத்தும் பலவீனமானவை, வீழ்ந்து வரும் தனது சாம்ராஜ்ஜியத்தை தூக்கி நிறுத்துவதற்காக அமெரிக்கா மிகவும் பலவீனமாக இலக்குகளை தேடுகின்றது. சீனாவிடம் இழந்து வரும் சந்தை வாய்ப்புக்களை ஈடுகட்ட தனது நட்புநாடுகளை நோக்கி அது தனது ஆயுதத்தை திருப்ப முற்பட்டுள்ளது. கிறீன்லான்டில் உள்ள தங்கம், வெள்ளி, செப்பு மற்றும் யூரேனியம் போன்ற தாதுப்பொருட்கள், எரிபொருட்களுடன், ஆட்டிக் பகுதி மீதான ஆளுமைக்கு அது முக்கியம் என்பதால் தனது பொருளாதார மற்றும் படைத்துறை விரிவாக்கத்திற்கு அதனை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## 2024இல் தமிழ்த்... தொடர்ச்சி ...

ஆதரித்த
1. சி.சிறிதரன்-யாழ்ப்பாணம்.
2. ஞா.ஸ்ரீநேசன்-மட்டக்களப்பு.
3. கி.கோடீஷ்வரன்-அம்பாறை.
4. ச.குகதாசன்-திருகோணமலை.

நால்வரும் வெற்றிபெற்றனர். இதன்மூலம் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டது சரியான முடிவு என்பது வெளிக் காட்டப்பட்டது.



இதேவேளை கடந்த பாராளுமன்ற தேர்த லில் வடகிழக்கில் உள்ள சகல ஆயுதக் குழுக்களையும் மக்கள் முற்றாக துடைத் தெறிந்தனர். மட்டக்களப்பில் பிரதேச வாத அரசி யலை முதன்மை படுத்திய பிள்ளையான், யாழ்ப் பாணத்தில் டக்லஷ் தேவானந்தா உட்பட ஏனைய தமிழ்தேசிய அரசியல் விடுதலைப்போராட்ட இயக்கங்களை சேர்ந்த புளட் சித்தாத்தன், ஈபிஆர்எல்எவ் சுரேஷ்பிரமச்சந்திரன், ரெலோ கோவிந்தன் கருணாகரன், முன்னாள் ரெலோ உறுப்பினர்களான ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் போன்றவர்களையும் தமிழ்மக்கள் தோற்கடித்தனர், மன்னார் மாவட்டத்தில் மட்டும் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் சொற்ப வாக்குகளால் தெரிவானார்.



இவ்வாறு கடந்த 2024இல் இடம்பெற்ற தேர்தல்களில் தமிழ்தேசிய கட்சிகள் பல பின் னடைவுகளை கண்ட ஆண்டாக அது அமைந்தது.

பொதுவான பிரச்சினைகளான வட கிழக்கில் பலதரப்பட்ட நில அபகரிப்பு, தொல் லியல் பிரச்சினைகள், பௌத்த மயமாக்கல், மேய்ச்சல் தரை விவகாரம், கல்முனை வடக்கு பிரதேச செயலக தரம் உயர்த்தும் விடயம் அது தொடர்பான நீதிமன்ற வழக்கு என்றவைகள் கடந்த 2024இல் தொடர்ச்சியாக இடம்பெற்றும் அவைகளை தடுப்பதற்கான ஆர்ப்பாட்ட பேரணிகள், போராட்டங்கள் என வடகிழக்கில் எட்டு மாவட்டங்களில் இடம் பெற்றாலும் எதற்குமே தீர்வு இன்றி தட்டிக் கழித்த வரலாறே ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்காவும், தற்போது இரண்டு மாதங்கள் மட்டுமே பதவிகளை தொடரும் புதிய ஜனாதிபதி அனுர குமாரதிசநாயக்காவும் உள்ளார்.

கடந்தவருடத்துக்கு முந்தியவருடம் 2023இல் புலம்பெயர் அமைப்புக்களுள் ஒன்றான உலகத்தமிழர் பேரவை (Global Tamils Forum -GTF) இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் குழுவினரும் இணைந்து 2023, ஏப்ரல்,27இல் தயாரித்த இமாலயப்பிரகடனம் அப்போது பர பரப்பாக பேசப்பட்டபோது பல தமிழ்தேசிய கட்சிகள், புலம்பெயர் அமைப்புக்களுடைய எதிர்பால் அது கிடப்பில் கிடந்தது. அது கடந்த 2024,பெப்ரவரி மாதம் மீண்டும் தொடங்கப் பட்டுள்ளது.



இமயமலைப் பிரகடனத்தின் சிறப்பம் சங்கள் குறித்த உரையாடல்களை ஊக்குவிக்கும் வகையில், 150 சர்வமத குருமார்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் இதை முன்எடுக்கின்றனர்.

முதலாவது கலந்துரையாடல் குருநாகலில் ஆரம்பமாகி கண்டி, மட்டக்களப்பு, மாத்தறை, வவுனியா என பல மாவட்டங்களில் இது தொடர்கிறது.

பௌத்த பிக்குகளான மாதம்பகம அசாஜி திஸ்ஸ தேரர், பேராசிரியர் பல்லேகந்தே ரத்னசார தேரர், கித்தலாகம ஹேமசார நாயக்க தேரர்,சியம்பலகஸ்வெவ விமலசார தேரர் மற்றும் உலகத்தமிழர் பேரவையின் சார்பில் அமெரிக்காவைச் சேர்ந்த எலியாஸ் ஜெயராஜா என்ற தமிழர் கலந்து கொண்டார்.

இதுவும் ஒருவகையான தமிழ்தேசிய அரசியலை தீர்ந்து போகச் செய்யும் செயலாகவே 2025இல் மாறக்கூடும.

கடந்த வருடம் தொடர் போராட்டங்களாக மட்டக்களப்பு மயிலத்தமடு,மாதவனை மேச்சல் தரை மீட்பு போராட்டமும், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தும் போராட்ட மும் கடந்த வருடம் தொடர்சியாக பல மாதங்களாக இடம்பெற்று முடிவுகள் இன்றி கைவிடப்பட்டன.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள், இராணுவத்தில் கையளிக்கப்பட்ட உறவினர் கள் பல வருடக்கணக்கில் தொடர்ச்சி யாக முன்னெடுத்தகவன ஈர்ப்பு போராட்டங்கள் கடந்த வருடமும் முடிவின்றி தொடர்ந்தவண்ணம் செல்கிறது. அது எதிர்வரும் 2025இலும் தொடரத் தான் போகின்றது.

ஊழல் ஒழிப்பும், பொருளாதார பிரச்சி னைகளும், அபிவிருத்திகள் மட்டுமே நாட்டில் உள்ளது என்ற மனோநிலையில்தான் புதிய ஜனாதிபதி அநுரவும், அவருடைய தேசியமக்கள் சக்தி அரசும், அமைச்சர்களும் அடிக்கடி கூறி வருகின்றனர். கடந்த 75, வருடங்களாக நாட்டில் தீர்க்கப்படாத ஒரு பெரும் பிரச்சினையாக இனப் பிரச்சினை உள்ளது அதனை தீர்க்க வேண்டும் என்ற மனோநிலை அறவே இவர்களிடம் இல்லை இந்த வருடம் கடந்த 2024, டிசம்பர் 15,16,17 மூன்று நாள் இந்தியாவில் இராஜதந்திர பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி அநுரா இனப்பிரச்சினை தொடர்பாகவோ,அதிகாரப்பகிர்வுதொடர்பாகவோ வாயே திறக்கவில்லை. ஆனால் அபிவிருத்திக்காக இந்திய அரசு வழங்கிய கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக 2371 மில்லியன் ரூபா வழங்கப்பட உள்ளதாகவும்

அதனை உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி மற்றும் மாகாண மக்களின் சமூக வலுவூட்டல் என்பன இத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் நோக்கங் களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி கல்விக்காக 315 மில்லியன் ரூபாவும், சுகாதாரத்திற்காக 780 மில்லியன் ரூபாவும், விவசாயத்திற்கு 620 மில்லியன் ரூபாவும், மீன்பிடித்துறைக்கு 230 மில்லியன் ரூபாவும் உட்பட 33 திட்டங்களுக்கு 2371 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதை கடந்த 24/12/2024 அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது புதிய ஜனாதிபதி பதவி ஏற்று முதலாவது அபி விருத்தி திட்டமாக இதனை நோக்கலாம் 2025,ம் ஆண்டு நடைமுறைக்கு இந்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என் கூறப்படுகிறது.

கடந்து செல்லும் 2024இல் ஆண்டு தமிழ்த் தேசிய அரசியலில் பல சிக்கலுடனே செல்கிறது. பிறக்கப்போகும் 2025ல் ஆண்டு வடகிழக்கில் தமிழ்தேசிய அரசியல் மீண்டெழுமா என்பதை பார்ப்போம். அடுத்த ஆண்டில் இன்னும் இரண்டு தேர்தல்கள் உள்ளூராட்சி தேர்தல், மாகாணசபை தேர்தல் இடம்பெறும் நிலையில் வடகிழக்கு தமிழர்களின் உண்மை நிலைமையை பார்க்கலாம்.

• • •

## கிளிநொச்சி ... தொடர்ச்சி ...

உறுப்பினர் சிறீதரனால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடந்த 20ம் திகதி எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அதனடிப்படையில், இந்த கூட்டத்தில் குறித்த விடயங்கள் தொடர்பில் ஆராயப் பட்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகம், கலாசார மண்டபம் அமைக்கப் பட்டிருந்த காணி, கிளிநொச்சி மத்திய கல்லூரி யின் பயன்பாட்டுக்கு உகந்த சந்திரன் பூங்காக் காணி உள்ளிட்ட நகர்ப்புறக் காணிகள் பல வற்றை இன்றளவும் இராணுவத்தினர் கையகப் படுத்தியுள்ளனர்.

அதேவேளை, நகரின் முதன்மைப் பாடசாலைகளுள் ஒன்றான கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் மைதானத்துக்கான பாதையை விடுவிக்குமாறு கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட சமநேரத்தில் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அது தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. 441 ஏக்கர் விஸ்தீரணமுடைய வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையின் 410 ஏக்கர் காணி தற்போதும் இராணுவத்தின் வசமுள்ளது. இதனை விவசாயத் திணைக்களத்திடம் கையளிக்கும் பட்சத்தில் இந்த மாவட்டத்தின் நூற்றுக்கணக்கானோருக்கான வேலை வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதால் பொதுப் பயன்பாட்டுத் தேவைகளுக்குரிய காணிகளை இராணுவத்திடமிருந்து விடுவிக்க உடனடி நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் வகையில் அமைவிடத்தைக் கொண்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுப்பயன்பாட்டு நிறுவனங்களை அண்மித்தும், பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலைகளை மூடுவதென்ற தீர்மானத்தை நிறைவேற்றி அதன் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

• • •

## சிரியாவில்... தொடர்ச்சி ...

அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களிலும் ஈடு பட்டிருந்தனர். றாட்ரஸ், லறகியா, ஜப்லா மற்றும் ஹோம்ஸ் பகுதியிலும் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் காவலத் துறையினர் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இதனைத்தொடர்ந்து பல பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதனிடையே, சிரியாவில் உள்ள குருதிஸ் அமைப்பினர் ஆயுதங்களை கீழே போட வேண்டும் இல்லை எனில் மண்ணுக்குள் புதைக்கப்படுவார்கள் என துருக்கியின் அதிபர் ரையிப் ஏடோகன் தெரிவித்துள்ளார். குருதிஸ் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகள் மீது துருக்கி மிகப்பெரும் படை நடவடிக்கையை மேற்கொள்வதற்காக தயாராகி வருவதாக தெரி விக்கப்படுகின்றது. அங்கு கனரக ஆயுதங் களையும் துருக்கி நகர்த்தி வருகின்றது.

## மத்திய கிழக்கு ... தொடர்ச்சி ...

இந்த பயணங்களில் சில உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக தகவலின் படி 2023ம் ஆண்டில் 69.17 வீதமான ஆண்களும் 30.83 வீதமான பெண்களும் உயிரிழந்துள்ளனர். இதில் மொத்தமாக 376 நபர்கள் இயற்கை மரணங்கள்,33 தற்கொலைகளும் இடம் பெற்றுள்ளன.

தொழிலுக்காக சென்றவராக இருந்தால் ஆண்களாயினும் பெண்களாயினும் தங்களது தொழில் திறன்களை வளர்த்துக் கொள்வதுடன் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஊடாக முறையாக வழங்கப்படும் சட்ட ரீதியான பயிற்சிகளை பெற்று தங்களை பதிவு செய்து கொள்வது பாதுகாப்பானது இதனால் ஏற்படும் இழப்புக்களை பணியகம் பொறுப்பேற்கும். இதனை புறந்தள்ளி சட்ட ரீதியற்ற முறையில் பணிப்பெண்களாக வெளி நாடுகளுக்கு செல்லும் போது பாதுகாப்புக்கான உத்தரவாதம் கிடைக்கப் பெறாது. பணியகம் ஊடாக ஒருவர் காப்புறுதிக்காக பதிவு செய்வதானது இரு வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பித்து தங்கள் பாதுகாப்பான தொழில் ரீதியான பயணங்களை தொடர முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

“டுபாய் நாட்டுக்காக பணிப்பெண்ணாக சென்றிருந்தேன். அங்குள்ள முகவர் மூலமாக வேலைக்கு சென்று வந்தாலும் சம்பளத்தை தரமாட்டார்கள். அவர்களே பிடுங்கி எடுத்து விடுவார்கள். தினமும் காலை 8.00 மணிக்கு சென்றால் மாலை 4.00 மணிக்கு ஏஜென்சிக்கு திரும்பிடுவோம். சாப்பாடு ஒழுங்காக தரமாட்டார்கள். காலை ஆகாரமாக தேனீர் மாத்திரமே தருவார்கள் .மூன்று மாதங்கள் கழித்து ஒரு அறபியரின் வீட்டுக்கு கொண்டு சேர்த்தார்கள். அங்கு குழந்தைகளை பராமரிக்க வேண்டும். ஆனால் என்னால் பறாமரிக்க முடியாது என்று கூறிய போது கடுமையாக தாக்கினார்கள்.

சாப்பாடு தரமாட்டார்கள். இதனால் மனமுடைந்து போய் விட்டேன் என்றும் 2022.12.92 ந் திகதி அன்று மீண்டும் இலங்கை தூதரகத்து சென்று 14 நாட்களின் பின் நாட்டுக்கு திரும்பினேன் “எனவும் திருகோணமலையை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான அஸீசா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) வயது (27) தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

இவ்வாறான நிலையில் எது எப்படி நடந்தாலும் இலங்கையில் பாதுகாப்பான வேலை வாய்ப்புக்களை ஊக்கிவிக்க பல விழிப்புணர்வுகளை சர்வதேச புலம்பெயர் தலுக்கான அமைப்பு (IOM) உள்ளிட்ட இன்னும் பல அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றன. அதிகளவான பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை தேடி செல்வதால் மனித கடத்தல் எனும் பாதகமான விளைவுகளுக்கும் உட்படுத்தப் படுகிறார்கள்.

இதில் பாதிக்கப்படுவது பெண்களே . எனவே தான் போலியான முகவர்களிடம் இருந்து ஏமாறாமல் சட்ட ரீதியான புலம் பெயர்வுகளுக்காக அனைவரும் இணைந்து சமூகத்தை விழிப்படைய செய்வோம்.

• • •

## தமிழ் தேசிய ... தொடர்ச்சி ...

இவைபோன்ற மேலும் பல பரபரப்பான செய்திகளை அதிரடியாக அறிவித்த அனுர திசநாயக்கா குமாரதுங்காவின் இந்த முன் மொழிவுகளில் எவை நடைமுறைப் படத்தப் பட்டுள்ளன..? இவற்றுள் ஒரு சிலவற்றைத் தவிர ஏனைய பரபரப்பான தகவல்கள் அனுர அரசினால் நடைமுறைப்படத்தப்படமுடியாது. இவ்வாறான ஒரு நிலையில் அனுரா மீது நம்பிக்கை வைத்த சிங்கள மக்கள் மட்டுமல்லாது தமிழ் மக்களும் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெறும் வகையில் வாக்குகளை அளித்து தனிப்பெரும் கட்சியாக ஆட்சிபீடம் ஏற்றினர். குறிப்பாக வடமாகாணத்தில் அதிகளவு ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தமிழர்களின் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்ததால், வடமாகாணத்தில் என்றுமில்லாத அளவுக்கு அதிகளவு ஆசனங்களை ஜேவிபி பெற்றுக் கொண்டமையானது, உலகத் தமிழர்களிடையே மட்டுமல்லாது தமிழர்களுக்குச் சார்பான நாடுகளிடையேயும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தாலும், இந்தத் தேர்தல் முடிவுகள் முக்கியமான சில மாற்றங்களை ஏற்படுத்தியது.

வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் பொதுத் தேர்தலில் எடுத்த முடிவின் காரண மாக இதுவரை அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சர்களாக இருந்து தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும்,சுபீட்சமான வாழ்வுக்கும், நிரந்தரத் மீர்வுக்கும் எதிராகச் செயற்பட்ட அரசியல்வாதிகளும், துணை இராணுவக் குழுக் களும் தமிழ் மக்களால் அரசியல் அரங்கில் இருந்து முற்றாகவே தூக்கி எறியப்பட்டமை தமிழ் மக்களிடையே ஏற்பட்ட ஆரோக்கியமான மாற்றமாகவே பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் தமிழ்,சிங்கள,முஸ்லிம் மக்களைக் கவரும் வகையில் சில அதிரடி யான முடிவுகளை அறிவித்த நிலையில் தமிழர் களிடையே அனுரா அலை வீசுகின்ற ஒரு அபாயகரமான நிலையை நோக்கியதாகத் தமிழ் தேசியமும், உண்மையானதமிழ் தேசிய வாதிகளும் தள்ளப்பட்டிருக்கின்றனர். பொதுத் தேர்தலில் வடமாகாணத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று ஐந்து ஆசனங்களைப் பறெ;ற வெற்றியின் காரணமாக தமிழ் மக்களிடையே மிகப்பெரும் செ;லவாக்கைப் பெற்றுவிட்ட ஜே.வி.பி. படிப்படியாக தமிழ் மக்களிடையே கிராமம் கிராமமாக ஊடுருவி அவர்கள் மத்தியில் ஆசை வார்த்தைகளை விதைத்து தமிழ்தேசியத்தின் பால்கொண்டுள்ள உணர்வுகளை மழுங்கடிக்கும் வகையில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இதுவரை காலமும் யாழ் மாவட்ட அமைப்பாளராக இருந்து தற்பொழுது அமைச்சராக இருக்கும் இராமலிங்கம் சந்திரசேகரம் மூலம் மிகவும் இரகசியமான முறையில் காய் நகர்த்தல்களை அனுரா அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.அதற்கமைய வடமாகாணசபையின் நிர்வாகத்தைக் கைப்பற்றுதல் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் சபைகளைக் கைப்பற்றுதல் போன்ற தந்திரோபாயமான நடவடிக்கைகளில் ஜே.வி.பி தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது. அனுரா அரசினால் முன்வைக்கப் பட்ட நிறைவேற்றமுடியாத முன்மொழிவுகளை நம்பி ஏமாந்து போகும் தமிழினம், இதுவரை காலமும் தமிழ் மக்களால் நிர்வகிக்கப்பட்டுவந்த உள்ளூராட்சி மன்றங்களையும், வடக்குக் கிழக்கு மாகாண சபைகளையும் பறிகொடுத்துவிட்டு தமிழர்களுக்காகப் போராடக்கூடிய சக்திகளையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட நிலையில் ஈழத்தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிலை ஏற்பட்டால் தமிழ் தேசியமும் சிதைக்கப்பட்டு தமிழர்களின் உரிமைக் குரல்களும் நசுக்கப்பட்டுவிடலாம் என்ற அச்சம் தமிழ் தேசிய உணர்வாரளர்களிடையே ஏற்பட்டுள்ளது.இதனால் இலங்கையில் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்,அவர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர், தமிழர்கள் காணாமல் ஆக்கப்படுகின்றனர், அவர்களில் பலர் படுகொலைகள் செய்யப்படுகின்றனர் என்ற தமிழ் மக்களின் கோரிக்கைகள் மழுங்கடிக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையிலும் தமிழர்களின் நியாயாமான கோரிக்கைகள் வலுவிழந்துவிடும். அதன்பின்னர்சிங்களத்தலைவர்களுடன்,சுமந்திரன் போன்ற தமிழ் அரசியல்வாதிகளும் சேர்ந்து கூறிவரும் ~ஏக்கிய இராட்சியம்~ என்ற ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளேயே தமிழர்கள் அடிமைகளாக வாழவேண்டி ஏற்படலாம் என்பதைச்சிந்தித்து தமிழ்மக்கள் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுத்து விவேகத்துடன் செயற்பட முன்வரவேண்டும்.

ஆனால் எவ்வாறுதான் தமிழ் தேசியத்தைச் சிதறடிக்கும் வகையில் ஜே.வி.பி. அரசாங்கம் முயற்சிகள் எடுத்துவந்தாலும் சிங்கள தேசத்திற்கு அதிர்ச்சி ஏற்படுத்தும் வகையில் நவம்பர் 27ஆம் திகதி வடக்குக் கிழக்கு எங்கும் இடம்பெற்ற மாவீரர் நாளில் பெருந்திரளான மக்கள் கொட்டும் மழையிலும் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்ட அந்த நிகழ்வானது தமிழ் தேசிய உணர்வை எவராலும் அழிக்கமுடியாது என்ற அந்தச் செய்தியை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளது.

• • •

## உலக சுகாதார ... தொடர்ச்சி ...

கட்டுப்பாட்டு கோபுரம், பயணிகள் விமானத் தில் ஏறும் நிலையம் ஆகியவை மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவர் தெரி வித்துள்ளார்.

ஏமனின் குதீஸ் அமைப்பின ரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐ.நாவின் 13 பணியாளர்களை மீட்கும் நடவடிக்கைக்காகவே ஹெப்றியெஸ் ஏமனுக்கு சென்றிருந்தார்.

இஸ்ரேலின் ரெல் அவிவ் பகுதி மீது கடந்த புதன்கிழமை(25) குதீஸ் அமைப்பினர் இரண்டு பலிஸ்ரிக் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். இந்த தாக்குதலை இஸ் ரேலின் வான்பாதுகாப்பு பாதுகாப்பை மீறிச் சென்று இஸ்ரேலினுள் வீழ்ந்து வெடித்ததால் இஸ்ரேலின் 100 இற்கு மேற்பட்ட விமானங்கள் ஏமன் மீது கடந்த வியாழக்கிழமை(26) தாக்கு தலை மேற்கொண்டிருந்தன.

கடந்த வாரம் அமெரிக்காவின் வான் படையினரும் ஏமன் மீது தாக்குதலை மேற் கொண்டபோதுஅமெரிக்காவின்எப்-18தாக்குதல் விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியிருந்தது.

## ஆழிப்பேரலை ... தொடர்ச்சி ...

நாடுகள் கடுமையான இழப்பை சந்தித்திருந்தன. அங்கு 131,000 பேர் கொல்லப்பட்டிருந்தனர். 7 வருடத்தின் பின்னர் யப்பானின் பக்குசீமாவில் ஏற்பட்ட பூமி அதிர்வும் நான்காவது மிகப் பெரும் சக்திவாய்ந்ததாகவே இருந்தது. 1833 ஆம் ஆண்டும் இந்தோனேசியாவின் சுமத்திரா கடல் பகுதியில் 9.2 றிட்ச் அளவுள்ள பூகம்பம் தாக்கியிருந்ததுடன், ஆசிய நாடுகளில் பேரழிவை ஏற்படுத்தியிருந்தது.

இலங்கையிலும் ஆழிப்பேரலையின் தாக்கம் கடுமையான பாதிப்புக்களை ஏற் படுத்தியிருந்தது. ஏறத்தாள 30,000 பேர் கொல் லப்பட்டிருந்தனர், வடக்கு கிழக்கு மாகாணங்கள் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகள் கடும் சேதங்களை சந்தித்திருந்தன. முல்லைத்தீவு மாவட்டம் கடும் பாதிப்புக்களை சந்தித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த அனர்த்தத்தை தொடர்ந்து அனைத் துலக நாடுகளால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 2.1 பில்லியன் டொலர்கள் நிதி உதவியில் ஒரு பில்லியன் டொலர்கள் நிதி உதவியே மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதிலும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தன.

## உலக வல்லரசின் ... தொடர்ச்சி ...

தெரிவுசெய்துள்ளது அமெரிக்கா. பனாமா கால்வாயும் அப்படியானது தான்.

ஒன்பது உறுப்பு நாடுகளைக் கொண்ட பிறிக்ஸ் அமைப்பு இந்த ஆண்டின் முடிவுடன் மேலும் 9 பங்காளி நாடுகளையும் கொண்ட அமைப்பாக விரிவாக்கம் பெற்றுள்ளது. அதாவது உலகின் மக்கள் தொகையில் அரை பங்கு மக்கள் தொகையை கொண்ட நாடுகளின் கூட்டணியாக அது பலமாகியுள்ளதுடன், இதுவரையில் உலகினை ஆட்சி செய்த பொருளாதார வல்லமை கொண்ட ஜி-7 நாடுகளின் கூட்டணியைய்யும் அது பின்தள்ளியுள்ளது.

பிறிக்ஸின் வளர்ச்சி, ரஸ்யாவை படைத்துறை மற்றும் இராணுவ ரீதியில் பலவீனப்படுத்த மேற்குலகம் மேற்கொண்ட முயற்சியின் தோல்வி, சீனாவின் பொருளாதாரத்தை முடக்க மேற்கொண்ட முயற்சியின் தோல்வி என்பன அமெரிக்காவிற்கு அச்சத்தை கொடுத்துள்ளது. அதனை இந்த வருடம் நன்றாக உணர்த்தியுள்ளது. உக்ரைனில் ரஸ்யா பெறும் வெற்றி என்பது அதன் விரிவாக்கமாகவும், ஐரோப்பாவின் வீழ்ச்சியாகவும் மேற்குலகம் பார்க்கின்றது. அது அமெரிக்காவின் உலக ஆழுமையை தகார்ப்பதுடன், அதற்கு மாற்றீடான ஒரு பலமான அணியை உருவாக்கிவிடும் என மேற்குலகம் அஞ்சுகின்றது. எனவே கிறீன்லான்ட், பனாமா, கனடா, மெக்சிகோ என தனது விரிவாக்கம் தொடர்பில் அமெரிக்கா சிந்தித்துவருகையில், காசா, லெபனான், சிரியா என இஸ்ரேல் தனது விரிவாக்கத்தை மேற்கொண்டுவருகின்றது.

ஆபிரிக்க கண்டத்தில் இந்த வருடம் ரஸ்யா மேற்கொண்ட விரிவாக்கமும், அங்கிருந்து அமெரிக்க மற்றும் பிரான்ஸ் நாடுகள் வெளியேறியதும், பூகோள அரசியலில் முக்கியமானவை. அதனை ஈடுசெய்வதற்கு அமெரிக்காவும், இஸ்ரேலும் அவசரமாக மேற்கொள்ளும் நகர்வுகள் தற்போதைய உலக ஒழுங்கை சீர்குலைத்துள்ளதே தவிர, அதனை ஈடுசெய்வதற்கு ஏற்றவையல்ல.

உதாரணமாக சிரியாவின் வீழ்ச்சியை உடனடியான வெற்றியாக இஸ்ரேலும், அமெரிக்காவும், துருக்கியும் பார்த்தாலும், முற்றாக உட்கட்டுமானங்களை இழந்த அந்த நாட்டை ஆரம்பத்தில் இருந்து கட்டியெழுப்புவது என்பது தற்போதைய பொருhளாதா சுமைகளை மேலும் அதிகப்படுத்தும் என்பதுடன், மத்திய கிழக்கின் பாதுகாப்பையும், உறுதித்தன்மையையும் அது நிரந்தரமாக சீர்குலைத்துள்ளது என்பது தான் உண்மை. உக்ரைனில் ரஸ்யா போரை வென்றால்



அது மத்தியகிழக்கில் தனது கவனத்தை திருப்பும் என்பதும் உண்மை.

காசாவில் ஆரம்பமாகிய போர் ஒரு வருடத்தை கடந்தும் பயணிக்கின்றது. ஹிஸ்புல்லாக்களின் தலைமைப்பீடத்தை ஆழித்து, ஹமாஸின் தலைவர்களை படுகொலை செய்த போதும் இஸ்ரேலினால் போரை வெல்ல முடியவில்லை. உலகம் பார்த்து நிற்க 46,000 மக்களை படுகொலை செய்த இஸ்ரேல் உலகின் அத்தனை சட்டவிதிகளையும் மீறியுள்ளது.

அதனை மேற்குலக நாடுகள் அனுமதித்தது என்பது அல்லது நிறுத்த முற்படாதது என்பது இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் உலக நாடுகளால் அதிலும் குறிப்பாக மேற்குலக நாடுகளால் உருவாக்காக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனிதாபிமான மற்றும் மனித நேய அமைப்புக்களின் கட்டமைப்புக்கள் அனைத்தும் சிதைந்துபோன ஆண்டாக இந்த வருடத்தை பார்க்கலாம்.

அமெரிக்காவினால் பயங்கரவாதியாக அறி விக்கப்பட்டு, அவரின் தலைக்கு 10 மில்லியன் டொலர்கள் பரிசு அறிவிக்கப்பட்ட ஒருவரை அதே அமெரிக்கா தலமையிலான மேற்குலக நாடுகள் ஜனநாயகப் போராளியாக தமது நலன்களுக்காக மாற்றியதும், மேகுலகம் மீதான எஞ்சியிருந்த நம்பிக்கையையும் உலகநாடுகளில் கேலிக்கூத்தாக்கியுள்ளதுடன், இதுவரையில் பயங்கரவாதம் என்ற சொற்பதத்தை மேற்குலக நாடுகள் தம்மை ஏமாற்ற பயன்படுத்தியதாகவும் உலகம் உணர்கின்றது.

அதாவது 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, பொருளாதாரத்தினாலும், போரினாலும் அதிகம் பாதிக்கப்பட்ட ஆண்டாக இந்த ஆண்டு கடந்து செல்வதுடன், உலக அமைதிக்காக உருவாக்கப்பட்ட அமைப்புக்களும் தமது வேடம் கலைந்து நிற்கின்ற ஆண்டாகவும் இந்த ஆண்டு தன்னை முடித்துக்கொள்கின்றது.

• • •

## அதிரடி அரசியல் ... தொடர்ச்சி ...

முதலாவது காரணமாக இருந்தன. பொருத்தமான அரசியல் வேலைத் திட்டங்களோ, செயற்பாடுகளோ இல்லாமல் வெறுமனே தேர்தல் அரசியலை இந்தக் கட்சிகள் நடத்தியதும் தமிழ்த் தேசியக் கட்சிகள் மீதான மக்களின் வெறுப்புக்கு மற்றொரு காரணம்.

தமிழ் மக்கள் மத்தியில் மற்றொரு தெரிவு இல்லாமையால், தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பது என்ற முடிவை பெரும்பாலான தமிழர்கள் எடுத்தார்கள். மட்டக்களப்பு தவிர்ந்த அனைத்துத் தமிழ்ப் பகுதிகளையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்ற இதுதான் காரணம்.

பாரம்பரிய தமிழ் தேசியக் கட்சிகள், தங்களின் அரசியல் நிலைப்பாடு களையும், செயற்பாடு களையும் மறுபரி சீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இப்போது உரு வாக்கியுள்ளது. பொதுத் தேர்தலின் முடிவு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு கசப்பான பாடத்தை கொடுத்திருந்தாலும் கூட, தமது அணுகுமுறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு அந்தக் கட்சிகள் இப்போது கூட தயாராகவில்லை.

போர் முடிவுக்கு வந்தபோது, தமிழ் மக்களுடைய தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் சென்றது. ஆனால், வரலாற்றில் தமக்கு வழங்கப்பட்ட முக்கியமான அந்தப் பொறுப்பை தனிப்பட்ட காரணங்களால் தமிழ்த் தேசியக் கட்சிகள் சிதறடித்தன. 2004 ஆம் ஆண்டில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர்களால் பெற முடிந்தது. இப்போது 10 தமிழ்த் தேசிய உறுப்பினர்கள்தான் தெரிவாகியுள்ளார்கள்.

தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் பிரச்சினை, பொறுப்புக்கூறுதல், போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தல் என்று எந்தப் பிரச்சினைக்கும் அவர்களால் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

இதன் உச்சகட்டமாக வழமையாக 13 என்பதையே தொடர்ந்தும் உச்சரிக்கும் இந்தியத் தரப்புக்கூட இப்போது அதனையும் கைவிடும் நிலை உருவாகியுள்ளது. தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த விவகாரத்தை கூட, இந்தியத் தரப்புக்கு எடுத்துச்செல்வதை தவித்தமைதான் இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. இந்த நிலையில், பிறக்கப்போகும் புதுவருடம் நம்பிக்கையளிப்பதாக இருக்க வேண்டுமானால், தமிழ்க் கட்சிகளும் தமது போக்கில் கணிசமான மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

• • •

## வெடுக்குநாறி ... தொடர்ச்சி ...

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வன்னிப் பகுதி மக்கள் கடந்த காலங்களில் இடம்பெயர்வைச் சந்தித்து மீள் குடியேறியது அனைவரும் அறிந்ததே. சில இடங்களில் குறிப்பட்டளவு காலங்களுக்குள்ளும், சில பகுதிகளில் நீண்டகாலங்களுக்குப் பின்னரும் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இந் நிலையில் மக்கள் இடப்பெயர்விற்கு முன்பதாக பயிர்செய்கையில் ஈடுபட்ட காணிகள் தற்போது பற்றைக்காடுகளாகக் காட்சியளிக்கின்றன. தற்போது இவ்வாறு பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கும் எமது மக்களுக்குரிய காணிகளுக்கு, எவ்வித முன்றிவிப்புக்களுமின்றி வனவளத் திணைக்களத்தினர் தற்போது எல்லைக்கல்லிடுகின்ற அடாவடித்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தந்த மாவட்ட செயலருக்கோ, பிரதேசசெயலருக்கோ, கிராம அலுவலருக்கோ, காணிகளுக்குரிய மக்களுக்கோ அறிவிக்காமலேயே இவ்வாறு எல்லைக் கல்லிடும்பணிகளில் வனவளத் திணைக் களத்தினர் ஈடுபடுகின்றனர்.

பூர்வீகமாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு திறம்பட வாழ்துவந்த எமது மக்களின் பயிர்ச்செய்கை நிலங்கள் இதில் அதிகமாக வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. வனவளத் திணைக்களத்தின் அடாவடித்தனமான ஆக்கிரமிப்புத் தொடர்பில் ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்டலாமென நினைக்கின்றேன். முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009இற்கு முன்னர் வனவளத் திணைக்களத்திடம் 2,22006 ஏக்கர், 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் அடாவடித்தனமாக எமது மக்களின் காணிகளுக்கும் எல்லைக்கல்லிட்டு 4,35000ஏக்கர் காணிகள் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது. அந்தவகையில் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது மக்களின் காணிகளை விடுதலைப் புலிகள் பாதுகாத்தனர். அவ்வாறு எமது மக்களின் காணிகளை விடுதலைப்புலிகள் பாதுகாத்ததால்தான் எமது மக்கள் நிறைவாகவும், சிறப்பாகவும் வாழ்ந்தார்கள். இவ்வாறு அபகரிக்கப்பட்ட மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டுமென நாம் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றோம்.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கத்திடமும் இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள எமது மக்களின் காணிவிடுவிப்புத் தொடர்பில் தொடர்ந்தும் வலியுறுத்துவோம். நாட்டிற்கு காட்டுவளம் தேவைதான். அதற்காக நாட்டுக்கான ஒட்டுமொத்த காடையும் வன்னிக்குள் இருந்து உருவாக்கவேண்டுமென நினைத்தால் அது முற்றிலும் தவறான நிலைப்பாடாகும். வன்னியில் மக்களிடம் இருந்த காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும். அவ்வாறு விடுவித்தாலே எமது மக்களால் தமது வாழ்வாதாரத்தைக்கொண்டு செல்லமுடியும்.

வன்னி மக்கள் சிறந்த உழைப்பாளர்கள். அவர்கள் உழைத்து வாழ்ந்த நிலங்களே இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும் வனவளத் திணைக்களத்தின் இந்த அடாவடித்தனமான செயற்பாடுதொடர்பில் கவனமெடுக்கவேண்டும். ஜனாதிபதி, பிரதமர், வனவளத் திணைக்களத்தோடு தொடர்புடையவர்களுடனும் நாம் இணைந்து பேசி இந்த பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

## 2024-பாதையும் ... தொடர்ச்சி ...

மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டின் ஜனாதிபதியாக இரண்டு தடவைகள் பதவி வகித்தவர். கிராமப்புற அபிவிருத்தி கருதிய அவரின் செயற்பாடுகள் அளப்பரியதாகக் காணப்பட்டன. எனினும் மலையக மக்கள் தொடர்பில் அவர் வாக்குறுதிகள் பலவற்றையே வழங்கி இருந்தார். பெருந்தோட்டப்புறங்களில் 50,000 வீடுகள், 25,000 வீடுகள் தொழிலாளர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படும் என்ற அவரின் வாக்குறுதி கானல் நீரானது. அத்தோடு சிறு தோட்ட அபிவிருத்திக்கு அவர் ஆற்றிய பங்களிப்பும் மெச்சத்தக்கதாக இருந்த நிலையில் பெருந்தோட்டங்கள் தொடர்பில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயற்பட்டதாகவும் ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி 2015 இல் முன்வைத்திருந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக மக்களின் பொருளாதார அபிவிருத்தி, வீட்டுரிமை, சுகாதார மேம்பாடு, இளைஞர் அபிவிருத்தி குறித்து முன்வைப்புக்கள் இடம்பெற்றிருந்தன. எனினும் இதுவும் பூரணபயன் தரவில்லை. இதேவேளை சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினை ஏற்படுத்தி தொழிலாளர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்திருந்தமை பாராட்டத்தக்கதாகும்.

இதனிடையே இவ்வருடம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களை முன்வைத்திருந்தனர். இவற்றுள் சஜித் பிரேமதாசாவின் தேர்தல் விஞ்ஞாபனம், மலையக மக்கள் அனுபவித்த கட்டமைப்பு ரீதியான புறக்கணிப்பை கருத்தில் கொண்டு, இந்த சமூகத்தின் நல்வாழ்வை மேம்படுத்த நேர் மறையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பெருந்தோடடத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றியமைப்பதன் மூலம் தொழிலாளர்கள் முதலாளிகளாக்கப்படுவார்கள் போன்ற பல விடயங்களை வலியுறுத்தி இருந்தது. இவ்வாறாக காலத்துக்குக் காலம் மலையக மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டதே தவிர செயல்வடிவம் குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. மலையக மக்களின் வாக்குகளை கவர்ந்து கொள்ளும் நோக்கில் குறுகிய நோக்கத்துடனேயே, இதயசுத்தியற்ற நிலையில் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமிருந்தன.

### ஹட்டன் பிரகடனம்

இதனிடையேதற்போதுபாராளுமன்றத்தில்அதிக பெரும்பான்மையை உள்ளடக்கி தேசிய மக்கள் சக்தி வீறு கொண்டெழுந்துள்ளது. இக்கட்சி ஊழல் மற்றும் துஷ்பிரயோகமற்ற ஆட்சிக்கு வலுசேர்ப்பதோடு, நாட்டு மக்களின் நலனுக்கு பல்வேறு வகையிலும் தோள்கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே வலுப்பெற்று காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி மலையக மக்களின் நலன் சார்ந்த விடயங்கள் பலவற்றையும் இவ்வாண்டு ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்திருந்தது. 2023.10.15 ஆம் திகதி தேசிய மக்கள் சக்தி வெளியிட்ட ஹட்டன் பிரகடனத்தில் குறிப்பிட்டவாறு மலையக தமிழ் மக்களின் அடையாளத்தையும், உரிமைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களின் காணி, வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மலையக தமிழ் சமுதாயத்தின் சம்பளத்தை வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற வகையில் அதிகரித்தல். மக்கள் கௌரவமான வருமானத்தை பெறுவதற்குள்ள உரிமையை உறுதிப்படுத்தல் போன்ற பல விடயங்கள் மலையக மக்கள் தொடர்பில் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்டிருந்தன. பெருந்தோட்ட சமுதாயங்கள் மத்தியில் வறுமையை ஒழித்துக் கட்டுவதற்காக போஷாக்கு, சுகாதாரம், கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்வாய்ப்பு வேலைத்திட்டங்களை உள்ளடக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுலாக்குதல், கலாசார, மொழி மற்றும் மதம் சார்ந்த உரிமைகளை பாதுகாக்கவும் பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்தல். சட்ட, மொழிச் சிக்கல்கள் மற்றும் ஏனைய அலுவல்களுக்கு வசதி வழங்குகின்றவாறான நிருவாகச் செயற்பாடுகளை வகுத்தல் போன்ற விடயங்களும் ஹட்டன் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தமை தெரிந்ததேயாகும்.

இதனிடையே தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மலையக மக்களுக்கு காணியுரிமை மற்றும் வீட்டுரிமை கட்டாயமாக பெற்றுக் கொடுக்கப்படுமென்றும், இதற்கென வரவு செலவு திட்டத்தில் விசேட வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுமென்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி ஏற்கனவே உரைச் ரண. நம்பிக்கை வெளியிட்டுள்ளார். மலையக மக்களை இந்நாட்டில் அடையாளப்படுத்தி தேசிய மட்டத்தில் உள்வாங்கும் நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தி வருவதாகவும் கலைச்செல்வி மேலும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி மலையக மக்களின் நலன்கருதி வழங்கிய வாக்குறுதிகளை இனிவரும் காலங்களில் நிறைவேற்ற வேண்டும்.

### பல்துறைசார் உரிமைகள்

சிறுபான்மையினரின் உரிமைகளை பேணும் சர்வதேச ஏற்பாடுகள் பல காணப்படுகின்றன. ஆனாலும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பது பற்றிய கரிசனைகளும் மற்றும் பொறுப்பு கூறப்படாத நிலைமைகளும் நீடித்துக் கொண்டிருக்கின்றன. நாடுகள் சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிய சித்தாந்தங்களைக் கொண்டிருந்தாலும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தில் தேசியவாதம் மற்றும் தேசிய தாராண்மைவாதம் ஆகிய இரு விடயங்கள் விவாதத்துக்கு உரியதாக தொடர்ந்துமுள்ளன. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் தேசியவாதம் மற்றும் தாராண்மைவாதம் பற்றிய பார்வையானது ஓர் எடுகோளாக இருந்தாலும் கூட அது தொடர்பில் ஆழமாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது என கிராஸ் பல்கலைக்கழகத்தின் சட்டபீடத் தலைவர் கலாநிதி ஜோசப் மார்க்கோ தெரிவித்துள்ளார். இவற்றை கருத்தில் கொண்டு சித்தாந்தங்களை மட்டுமே கொண்டிராது மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் பல்துறைசார் உரிமைகளை உறுதிப்படுத்த ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும். தேசிய மக்கள் சக்தி இதற்கு முன்னுதாரணமாக வேண்டும் என்பதே பலரினதும் எதிர்பார்ப்பாகும்.

• • •

## ஹசீனாவை ... தொடர்ச்சி ...

கடந்த ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற மாணவர் புரட்சியை தொடர்ந்து ஹசீனா இந்தியாவுக்கு தப்பியோடி யிருந்தார்.

எனினும் இந்தியா ஹசீனாவுக்கு அடைக்கலம் கொடுத்திருப்பது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பாதிக்கும் என பங்களாதேசம் தொடர்ந்து தெரிவித்து வருகின்றது. இந்த நிலையில் ஹசீனாவை நாடு கடத்துமாறு இந்திய வெளிவிவகார அமைச்சகத்திற்கு தமது வெளிவிவகார அமைச்சகம் கடிதம் ஒன்றை கடந்த திங்கட்கிழமை(23) அனுப்பியுள்ளதாக உள்த்துறை அமைச்சக ஆலோசகர் ஜகன்கீர் அலம் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையில் உள்ள ஆட்களை நாடுகடத்தும் உடன்பாட்டின் அடிப்படையில்அதனைஇந்தியாசெய்யவேண்டும்என அலம் தெரிவித்துள்ளார். டாக்காவைத் தளமாகக் கொண்ட அனைத்துல குற்றவியல் தீர்ப்பாயம் ஹசீனா மற்றும் முன்னாள் அரசியல்வாதிகள் மீது பிடிவிறாந்தை பிறப்பித்துள்ளது. மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலையை மேற்கொண்டதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனிடையே சிறுபான்மை இந்துக்கள் மீது பங்களாதேச புதிய அரசு இனஅழிப்பை மேற்கொள்வதாக ஹசீனா இந்தியாவில் பல தடவைகள் குற்றம் சுமத்திவருவது பங்களாதேச அரசுக்கு கடும் நெருக்கடிகளை ஏற்படுத்திவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிரிக்ஸில் ... தொடர்ச்சி ...

படுத்திய கடிதமொன்றை இலங்கை வெளிவிவகார அமைச்சு ரஷ்யா ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கும் அனுப்பியிருந்தது.

இந்த நிலையில், விண்ணப் பித்த 35 நாடுகளில் 9 நாடுகளை மாத்திரமே இணைத்துக் கொள்ள கூட்டமைப்புக்கு தலைமை தாங்கும் ரஷ்யா தீர்மானித்துள்ளது எனத் தகவல் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

JR Print
www.jrprint.com
0208 503 6643
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்





